# கவிதை

## விமர்சனம்

விலை ரூ 1/-

★

பேராசிரியர்

முத்துசிவன், *B. A. (Hons.)*

ர் பிரசுரம், திருச்சிராப்பள்ளி

இது ஒரு இனிய இலக்கிய தலாப்ஜான்! தொட்ட இடமெல்லாம் தித்திக்கும் இயல்புடையது: கற்பனைப் பாலில் ஊறி, கவிதை நெய்யில் மிதந்து கனிந்த விமர்சன தலாப்ஜான். பால் மணம், நெய் மணம், கனல் ஒளி, கலந்தது! வாழ்க்கையில் கண்டது! ஆகவே இதைக் கற்கண்டு என்று சொல்வதைவிட, தலாப்ஜான் என்றுகொள்வது மிகமிகப் பொருத்தம்.

*Printed at the S. I. Press, Karaikudi*
*for Star Publications, P. I. C. Ty. 9 (A)— 1000 Copies*

# கவிதை

★ விமர்சனம்

தமிழ்ப்பேராசிரியர்

★ ஆ. முத்துசிவன், B. A. (Hons)

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை . . 71. பெரியதெரு

திருச்சினுப்பள்ளி . . திருவல்லிக்கேணி, சென்னை

## "கவிதை மின்னல்" — கவிஞன் ஷெல்லி

தமிழில் V. R. M. செட்டியார்

உலக மொழிகளுக்கெல்லாம் பொருந்த, கவிதையின் ஆழத்தையும், அகண்ட சக்தியையும், நிறைந்த மனோ பாவத்தையும, கற்பனை மின்னலையும், மகோன்னத மந்திரச் சொல்லையும் மிக அருமையாக அனுபவித்துக் கூறுகிறான், கவிஞன் ஷெல்லி;

உண்மைக் கவிஞன் யார்? — அவனே நிதிச் சுரங்கம், கற்பனைக் களஞ்சியம், உணர்ச்சிச் சிற்பம், வருங்கால ஞானி, மொழியரசு, புரட்சி வீரன், இயற்கையோடு ஒன்றி வாழ்கின்ற, இயற்கைக் கொடியே தாங்கிநிற்கின்ற, அருளாவேசம்கொண்ட மாபெரும் மனித — தெய்வம்!

[ விரைவில் வெளிவரும் ]


★ **விரைவில் வெளிவரும் :**

**பாரதி** — நூதன விளக்கம் : ஆ. முத்துசிவன்

# கவிதை.

கவிதைக்கு இலக்கணம் கூறுதல் என்பது ஒரு கஷ்டமான காரியம். எத்தனையோ அறிஞர்கள் எத்தனை விதமான இலக்கணங்களை யெல்லாமோ கற்பித்திருக்கின்றார்கள். "பல வகைத் தாதுக்கள் சேர்ந்த உடலுக்கு உயிர்போன்று பல சொற்களால் பொருளுக்கு இடனாக எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடைகளாலும் அணிகளாலும் நிரம்பப்பெற்று கவிவல்ல புலவனால் பாடப்படுவது" என்றும், வாழ்க்கையை உணர்ச்சி ததும்ப விளக்கிக்காட்டும் கருவி என்றும், மனித அறிவினுடைய நுண்ணிய உயிர்ப்பு என்றும், சரியான பதத்தைச் சரியான முறையில் சரியான பொருள் தரும்படி உபயோகிக்கும் வித்தை என்றும் பலபடியாக அதற்கு இலக்கணம் வகுத்திருக்கின்றார்கள் மேல் நாட்டாரும் கீழ் நாட்டாரும். எத்தனை இலக்கணம் கற்பித்தாலும் எல்லா இலக்கணங்களும் கவிதையினுடைய முழு வடிவத்தையும் காணும்படி ஒளி வீசுகின்றனவா? இல்லை. ஏதோ இன்னும் காணாத அம்சங்கள் பல இருக்கின்றன என்று எண்ணும்படியே மனம் துணிகின்றது. ஏன் என்றால் கவிதை ஜீவனுடையது. வளரும் இயல்புடையது. சொல் - கோட்டைக்குள் வளைத்து அதைக் கிட்டியில் மாட்டிவிடலாம் என்பது முடியாத காரியம். அது "கைக்குள் அடங்காத (ஒரு) கள்ளி"

கவிதைக்குரிய இலக்கணம் பற்றி நாம் பொதுப்படையாகக் கவனிக்கிறதென்றால் இரண்டு பிரதானமான கட்சிகளைக் கவனிக்க வேண்டியதிருக்கிறது. ஒன்று எதார்த்தத்தை விரும்புகின்ற கட்சி. மற்றொன்று எதார்த்தமானாலும் சரி, கற்பனையானாலும் சரி, விஷயத்தைப் பற்றி அக்கறையில்லை, ஆனால் விஷயத்திற்கு வார்த்தைகளின் மூலம் கற்பிக்கின்ற ரூபமே பெரிதென்று ரூபத்தைப் பெரிதும் மதிக்கின்ற கட்சி.

எது எதார்த்தமோ அதைத்தான் சொல்லவேண்டும் என்று எதார்த்த வாதிகள் சாதிக்கின்றார்கள். ஏனென்றால் எதார்த்தம அல்லாததைப் பற்றிக் கூறுவ

தால் யாதொரு பயனுமில்லை. எதார்த்தம் அல்லாதது என்றுமே இல்லாதது. அதைப் பற்றி அறிவதனாலோ அறியாது விடுத்தலினாலோ இலாபமோ நஷ்டமோ ஒன்றும் இல்லை என்று இவ்வாறெல்லாம கூறுகின்றார்கள்.

அப்படியானால்,

" பாக்காவது கமுகம்பழம் பருப்பாவது துவரை
மேற்காவது கிழக்கே நின்று பார்த்தால் அது தெரியும்
நாற்காதமும் முக்காதமும் நடந்தால் எழு காதம்
ராக்கா உண்மை சொன்னேன் இனி ரட்சிப்பயோ
பட்சிப்பயோ "

என்று வருவது சிறந்த கவிதையாகத்தான் கருதப்பட வேண்டும். இது சிறந்த கவிதை என்று பாராட்டப்படுகிறதா என்றால் இல்லை. இதைச் சொன்னதும் உலகம் சிரித்துவிட்டு ஒதுக்கி விடுகின்றது.

இனி கற்பனையோடு கலந்துவரும் கவிதை ஒன்றைப் பார்ப்போம். தலைவனைக் காணாது தலைவி வருந்துகின்றாள். பகல் நேரத்தையாவது ஒருவகையாகக் கழித்துவிடலாம். ஆனால் இரவு நேரத்தைக் கழிக்கிறது என்பது தனிமையில் இருக்கிறவர்களுக்கு மிகவும் கஷ்டமான காரியம். தனிமையின் கொடுமை அப்பொழுதுதான் மிக அழுத்தமாக நெஞ்சைத் தாக்குகின்றது. தனிமைத் தீயில் அகப்பட்டு, பாவம், தலைவியினுடைய உள்ளம் வெந்து பொசுங்குகின்றது. ஆற்றும் மனவன்மை இல்லை. மனம் அழுங்கி இயற்கையைப் பழிக்கின்றாள். எதார்த்தத்தைச் சொல்லுகிறதானால், இரவு சீக்கிரம் தொலையாதா, பகற்பொழுது வராதா, வந்தாலும் நாலு காட்சிகளைப் பார்த்தாவது மனச் சாந்தி அடையலாமே என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் அதே உண்மையை இனிய கற்பனை முலாம்பூசிக் காட்டுகிறதானால் அதற்குக் கிடைக்கின்ற வேகமும் வீரியமும் அழுத்தமும் ஒரு தனி ரகந்தான். " பாம்புதான் இந்த சூரியனை விழுங்கி விட்டதா? அல்லது அவன் தேரிலுள்ள அச்சு மரம் ஒடிந்து குதிரைகளெல்லாம் கயிற்றைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டனவா? அல்லது சூரியனே செத்து

மடிந்துவிட்டானா? தோழி, எந்தவிதம் பொழுது விடியப் போகின்றது?'' என்று இவ்வாறு சொல்லும்பொழுது உண்மையிலேயே மிக ரம்மியமாக இருக்கின்றது.

'' அரவம் கரந்ததோ அச்சு மரம் இற்றுப்
புரவி கயிறுருவிப் போச்சோ—இரவிதான்
செத்தானோ வேறுவழிச் சென்றானோ தோழியெனக்கு
எத்தால் விடியும் இரா ''

ஒரே உண்மைதான். அதைப் பார்க்கின்ற முறையில் பார்த்தால் இலேத்தும் இருக்கின்றது. இதயத்தை அள்ளக்கூடியதாகவும் இருக்கின்றது. எல்லாம் அது புனைந்து கொள்ளும் ஆடையைப் பொறுத்தது.

எதனால் இவ்வாறெல்லாம் கற்பனை செய்யும் இயல்பை இயற்கையானது நமக்குக் கொடுத்திருக்கிறது? கவிதைக்கு மிக அனுசரணையானது. அதனாலே தான இந்த இயல்பை அது நமக்குக் கொடுத்திருக்கின்றது. எது ஒன்றையும ஒருபடித்தான, ஒருவித மாற்றமும் அற்ற முறையில் பார்த்துக்கொண்டிருப்ப தென்றால் மனம் சலித்துவிடும். அப்படியான சலிப்பின ஆட்சிக்குள் மனம் படிந்துவிடக் கூடாதென்றே ஒவ்வொன்றையும் பலவிதமாகவெல்லாம் பாவித்து உணரும்படியான ஒரு சக்தியை இயற்கையானது நமக்குக் கொடுத்திருக்கின்றது. ஒருவன் புறப்பட்டுச் செல்லும் போது பூனை குறுக்கிட்டால் அவனுக்கு ஆபத்து என்று வாழையடி வாழையாக நாம் சொல்லிவருவதை மாற்றி, ஐயோ பாவம், அவனைக் குறுக்கிட்டதால் அந்தப் பூனைக்கு என்ன ஆபத்தோ என்று கற்பனை செயது சொல்லும்போது உண்மையிலேயே ரஸமாகத்தான் இருக்கின்றது. இப்படியான ரஸ உணர்ச்சி மனிதனுக்கு என்றும் இருக்கவேண்டும். அப்போதுதான் அவனுக்கு வாழ்க்கையில் ஒரு புதுமையும் இன்பமும் சதா தோன்றிக் கொண்டிருக்கும். இத்தகைய பெருநோக்குடனே தான் இயற்கையானது நமக்கு ஒரு பொருளை நேரடியாகக் காணும் குணத்தையும் கற்பனையாகக் காணும் குணத்தையும் கொடுத்திருக்கின்றது.

இனிமேல் கவிதையானது மேலே குறிப்பிட்ட இரண்டு கட்சிகளையும், அதாவது எதார்த்தக் கட்சி, கற்பனைக் கட்சி ஆகிய இரண்டினையும் எப்படி சமாதானப் படுத்துகின்றது என்பதைப் பார்ப்போம். உலகத்தில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அழகை எதார்த்தம் என்ற திரையானது மறைத்து வைக்கின்றது. கவிதை அந்தத் திரையைக் கிழித்து அழகைக் காணும்படி துணை செய்கின்றது. சில உதாரணங்களைப் பார்ப்போம்.

நான்கு கால்களையும் மேலே ஒரு பலகையையும் கொண்ட ஒரு பொருளை எதார்த்தமானது மேஜை என்ற பெயரால் அழைக்கின்றது. அதே மேஜையைக் கவிதையானது சிறந்த தத்துவத்தின் கொள்கலமாகப் பாவிக்கின்றது. தத்துவ ரூபமாகப் படிந்து கிடக்கும் அழகை இங்கே கவிதையானது எடுத்து விளக்குகின்றது. "ஏதோ சில நேர் கோடுகள் தங்களுக்குள்ளே ஒப்பந்தம் செய்து கொண்டு ஒன்றை ஒன்று தழுவி எவ்வளவு பக்குவமாகப படிந்துகிடக்கின்றன! ஆனால் பாழும் மனத்தில் எத்தனை கோடுகள் தான் இருக்கின்றன! மண்ணாசை ஒரு கோடு. பெண்ணாசை ஒரு கோடு. பொன்னாசை ஒரு கோடு. ஐயையோ எத்தனை கோடுகள், எத்தனை கோடுகள்! இவைகள் எங்கேயாவது எப்போதாவது சந்திக்கின்றனவா? இல்லையே, சாகும் வரை இல்லையே." என்று இப்படியெல்லாம் எண்ணும்படி கவிதையானது தூண்டுகின்றது. இப்படிப் பார்ப்பதனால் கிடைக்கிற இலாபம் என்ன என்று கேட்கலாம். எது ஒன்றையும் எப்போதும் பார்த்த ஒரு நிலையிலேயே பார்த்து மனம் சலிப்படையாதிருக்கும் பொருட்டும், ஒவ்வொன்றினிடத்தும் அதனுள்ளே உறைந்து கிடக்கும் அழகை உணர்வதற்கும், உணர்ந்து மகிழ்வதற்கும் கிடைக்கின்ற சந்தர்ப்பந்தான் நாம் பெறுகின்ற இலாபமாகும்.

இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம். ஆஃவிரிக்காக் கண்டத்தையும் ஆசியாக் கண்டத்தையும் பிரித்து நிற்கும் கடலைப் பார்த்ததும், நமக்கு அது செங்கடல் என்ற ஒரு பூகோள உண்மையாக மட்டிலும் தோன்றும். எதார்த்தமானது அதைச் செங்கடல் என்றே எண்ணும் படியும் அழைக்கும்படியும் தூண்டுகின்றது. கவிதைத்

யானது எதார்த்தம் இட்டிருக்கின்ற திரையைக் கிழித்து அதை வேறு விதமாகப் பாவிக்கும்படி செய்து, அதனிடத்து உறைந்து கிடக்கும் குண அழகைக் காணும்படியும் கண்டு மகிழும்படியும் துணைபுரிகின்றது. ஆஃவிரிக்காக் கண்டமானது ஆசியாக் கண்டத்தைப் பார்த்து, "நீ அக்கரை, நான் இக்கரை. உனக்கும் எனக்கும் இனிமேல் ஒரு தொடர்பும் வேண்டாம்" என்கின்றது. ஆசியாக்கண்டமும் அதைப் பார்த்து அப்படியே சொல்கின்றது. இந்த அநியாயத்தைத் தாங்க முடியாமல் இயற்கை தேவியானவள் வடித்த கண்ணீரே செங்கடலாகத் தேங்கி நிற்கிறது என்று கவிதை கூறுகின்றது. இவ்விதம் கவிதையானது எதார்த்தம் என்ற திரையைக் கிழித்து அழகைக் காணும்படி துணை செய்கின்றது. எப்பொருளும் எப்போதும் உண்டான பழக்கமான தோற்றத்தில் காணப்பெறாமல் ஓர் புதிய சோபையோடு தோற்றம் அளிப்பதாகவே தோன்றும். (Poetry lifts the veil from the hidden beauty of the world and makes familiar objects be as if they were not familiar.) தாமரையைப் பார்த்தால், கேவலம் இது இன்ன ஜாதியைச் சேர்ந்தது என்ற பகுத்தறிவு ஞானம் மட்டிலும் மனதில் தோன்றுது. அதை வேறு ஒரு நிலையில் நின்று புதுமுறையாகப் பார்க்கும்படி கவிதை தூண்டும். 'சோலைத் தலைவி' என்று சொல்லும். "ஜோதிச் செடி, ஜோதி படர்ந்த சுடர்ப்பூ" என்று இவ்வாறெல்லாம் சொல்லும்.

பலா மரத்தை நாம் எத்தனையோ முறை பார்த்திருக்கின்றோம். உண்பது நாழி உடுப்பது நான்குமுழம் என்ற நியதிக்கு உள்ளான மக்கள் இனத்தார் எத்தனை பேரோ அதைப் பார்த்துப் பார்த்து மடிந்திருக்கின்றார்கள். ஒருவன் அதனுடைய இலக்ஷிய வடிவான அழகை மனமாரப் பருகியிருக்கின்றான். ஏனென்றால் அவன் கவிஞன். கவிஞனுக்கு நம்மைவிட எவ்வளவோ மேலான அறிவு உண்டு. உணருகின்ற ஆற்றலும் உண்டு. மற்றும் உணர்ந்ததை உணர்த்துகின்ற ஆற்றலும் உண்டு. இன்னும் ஒரு அருமைப்பாடு என்னவென்றால், சங்கீத வித்வானுடைய இசைத் திறமையில் மனதைப் பறி

கொடுத்து கீர்த்தனாசிரியனை மறப்பது போன்று கவிஞனுடைய கலைத் திறமையில் லயித்து அவனையே கருத மறக்கின்றோம். அத்தோடு நாமும் அவனுக்கு நிகர் என்று எண்ணியும் விடுகின்றோம். ஏனென்றால் அத்தனை கவர்ச்சி பிறக்கின்றது. "முன்னிக் கவிதை வெறி மூண்டு" நனவழிந்து விட்டால், அவனுடைய மேதையின் போக்கே தனி. வண்ணச் சிறகு தறும். மகத்தாகப் பறந்துவரும். விண்ணகத்தே ஏறும். மண் நோக்கித் தாழும். தண்ணமுதப் பாட்டிசைக்கும். தாரகையின் ஊடுசெல்லும். காணாதன காட்டும். கருதாதன உணர்த்தும். கல்லைக் கனியாக்கும். கடுவிஷத்தை அமுதாக்கும். கோடி வளங்குவிக்கும். கோபுரத்தைப் பொன்பூசும். அதன் சக்தியும் பெரிது. அதன் வளமும் பெரிது. எதனையும் ஆழஉணரும். அகல விரிக்கும். அத்தகைய போக்கு அதன் போக்கு.

மேலே ஒரு பலா மரத்தைக் குறிப்பிட்டோம். அதை ஒரு கவி பார்க்கும்போது அந்தப் பார்வையினுடைய விசேஷமே புது மோஸ்தரைப் பெற்றதாக இருக்கின்றது. பலாவின் கொப்பெல்லாம் சதுர்வேதம். பிஞ்செல்லாம் சிவலிங்கம். கனியெல்லாம் சிவலிங்கம். சுளையெல்லாம் சிவலிங்கம். வித்தும் சிவலிங்க சொரூபந்தான்.

(கேதாரகௌளம் அல்லது பைரவி)

" கிளைகளாய்க் கிளைத்த பல கொப்பெல்லாம் சதுர்வேதம்
கிளைகளீன்ற
கலையெலாம் சிவலிங்கம் கனியெலாம் சிவலிங்கம்
கனிகளீன்ற
சுளையெலாம் சிவலிங்கம் வித்தெல்லாம் சிவலிங்க
சொரூபமாக
விளையுமொரு குற்றும்பலவின் மூளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே"

(குற்றாலக் குறவஞ்சி)

என்று வரும் பாடல் கவிஞன் கண்ட அழகின் ஆவேச மொழிபெயர்ப்பு. இன்னும் மேலே செல்வோம்.

மனிதன் அனுபவிக்கின்ற, இன்னும் அனுபவிக்க ஆசைப்படுகின்ற, ஆனாலும் அவனால் எத்தனை முயன்று

லும் எடுத்துச் சொல்லமுடியாத விஷயத்தை எடுத்துச் சொல்வதோடு, மிக அழகான பாஷையில், கவிஞன் மனதில் அவன் சொல்லப் புகுந்த பாவம் எப்படி உரு வானதோ அம்மாதிரியே வாசிக்கின்றவன் மனத்திலும் உருவாகும்படி அவ்வளவு நேர்த்தியாகவும் சொல்லிவிடு கின்றான். ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

போருக்குச் சென்ற கணவன் குறிப்பிட்ட காலத் திற்குள் வந்து சேரவில்லை. ஒருநாள் வீட்டில் ஏதோ காகம் கூப்பிடுகின்றது. போதாக்குறைக்கு வெள்ளை எச்சம் இட்டும் செல்கின்றது அத்தோடு விருந்துப் பூச்சி குறுக்கும் மறுக்குமாக வீட்டில் ஊர்ந்து செல்கின் றது. கண்டிப்பாக அன்று நாதன் வீட்டுக்கு வருவான் என்ற நம்பிக்கையோடு இரவில் கதவைத் திறந்து வெளியே பார்க்கின்றாள். வராமை கண்டு கதவை அடைக் கின்றாள். இப்படியே இரவு முழுவதும் வருவான் என்று திறந்தும் வாரான் என்று அடைத்தும் ஓயாத தொல்லை யைக் கதவு அடையும்படி செய்ததனாலே, கதவுக் குடுமியே தேய்ந்துவிட்டது என்று கவிஞர் கூறுகின்றார். கேவலம் கதவுக் குடுமிக்குக் கொடுக்கின்ற ஒரு விசேஷ அழுத்தத்தினாலே பாவமானது நமது மனதில் நன்றாகப் பதிந்து நம்மை அப்படியே அதன் 'ஆட்சிக்கு அடிமை யாக்கி விடுகிறது.

"வருவார் கொழுநர் எனத்திறந்தும் வாரார் கொழுநர்
எனஅடைத்தும்
திருகும் குடுமி விடியளவும் தேயும் கபாடம் திறமினோ"
(கலிங்கத்துப் பரணி)

இப்படியாக மனித அனுபவத்தையே மனிதனுக்கு எடுத்துச் சொன்னாலும், அழகான பாஷையில், அழகான வடிவில், என்றென்றும் வாசித்தவனுடைய நெஞ்ச வீட்டில் உல்லாசமாக உலவித் திரியும்படி செய்யவல்ல ஆற்றல் கவிதைக்கு வாய்த்திருப்பதால் அதை நாம் பாராட்டுகின்றோம். இன்னும் கவிதைபற்றி வருகின்ற பல உண்மைகளைப் பார்ப்போம்.

கற்பனை கலவாத வாழ்க்கை வாழ்க்கையில்லை. உலகில் சிலர் இருக்கின்றார்கள். கற்பனையின் பெருமை

யையும் வாழ்க்கைக்கு அது ஓரளவு இன்றியமையாதிருப்பதையும் அவர்கள் உணர்கின்றார்கள். இல்லாவிட்டால் "மகா பாவி, எச்சிக்கையால் கூட காக்காயை விரட்ட மாட்டான்" என்றோ, "இந்த அன்னம் எட்டுக் கல்யாண வீடுகளுக்குப் போதுமே" என்றோ சாதாரண விஷயங்களை மிகைப்படுத்திச் சொல்ல மாட்டார்கள் அல்லவா? நம்பத்தான் செய்கின்றார்கள். கற்பனை இல்லை யென்றிருக்குமானால் அந்நிலையை ஒரு அபாக்யம் என்றுகூடக் கருதுகின்றார்கள். ஆனாலும் கவிதை மணம் கலந்த மனப்பான்மை, கவிதை மணம் பரிமளிக்கும் நிலையில் வாழ்க்கையை நடத்துதல் என்பதற்கும் கவிதையை விரும்புதல், கற்றல் என்பதற்கும் எவ்வளவோ வேற்றுமை இருக்கிறது என்பதாகவே அவர்கள் கொள்கின்றார்கள்.

கவிதையில் இரண்டு விதம் உண்டு. † எதார்த்த கவிதை, * சுவடிக்கவிதை என்பன. ஒருவன் லக்ஷிய வடிவான காதலில் ஈடுபடுகின்றான் அல்லது நாட்டுக்காக வேண்டி உயிரையே தியாகம் செய்கின்றான். அல்லது உண்ணாவிரதம் போன்ற மகா காரியத்தைச் செய்கின்றான். இவ்வாறு நிகழுகின்ற ஒன்றை நாம் எதார்த்த கவிதை என்று சொல்லலாம். ஏனென்றால் இந்தச் செயலில் கவிதைமணம் பரிமளிக்கின்றது. சாதாரணமான ஒன்று இலக்ஷிய நிலைக்கோ அல்லது கற்பனையாகப்பாராட்டப்படும் நிலைக்கோ உயர்த்தப்படுகின்றதல்லவா? அதனாலேதான. இவ்விதமான எதார்த்த-கவிதையில் இருக்கின்ற சுகம் சுவடிக் கவிதையில் இல்லையாம். இது போன்று அவ்வளவு ருசி உடையதாக இல்லையாம். மற்றும் ஓரளவு கஷ்டமாகவும் இருக்கிறதாம். ஆகவேதான் சிலர் . "எனக்குக் கவிதையே விளங்குகிறதில்லை. என்னால் அநுபவிக்க முடியவில்லை" என்கிறார்கள். இந்த முரண்பாட்டினில், அதாவது எதார்த்த-கவிதைக்கும் சுவடிக் கவிதைக்கும் உண்டான முரண்பாட்டினில் படிந்து கிடக்கும் உண்மை யாது? சிந்தனை செய்வதைக் காட்டிலும் செயலைச் செய்வது எளிது. அதை விளங்கிக் கொள்வதும் எளிது.

† நிஜ வாழ்க்கையில் காணும் கவித்துவக் காட்சி.
* கற்பனையாக எழுதும் கவிதை.

- ஆகையினாலேதான் சிலர் அப்படிக் கொள்கின்றார்கள். இப்படியான உண்மையே மேலே கூறியதிலிருந்து வெளியாகின்றது.

சுவடிக் கவிதையை அசட்டை செய்கின்றவர்கள் எதனால் அப்படிச் செய்கின்றார்கள்? சிந்தனை கலந்திருப்பதனாலா என்றால் இல்லை. சிந்தனையும் ஒரு தனிப்பட்ட ரகமாக இருக்கின்றது. அதை வெளியிடும் முறையும் ஒரு தனிப்பட்ட ரகமாக இருக்கின்றது. எதை வெளியிட வேண்டுமானாலும் ஏதாவது ஒரு செய்யுள் முறையில் வெளியிட வேண்டும். செய்யுள் முறையில் வெளியிடுவதானால் அதற்கென்று ஏற்பட்டுள்ள இலக்கண முறையைத் தழுவ வேண்டும். இதெல்லாம் சங்கடந்தானே. ஆகையினாலேதான் சுவடிக் கவிதையானது அசட்டை செய்யப்பட்டு வருகின்றது.

சுவடிக் கவிதை ரஸமற்றது என்று யாரேனும் சொன்னால் அவர்களுடைய மனப பக்குவத்தை ஓரளவு சந்தேகிக்க வேண்டியதுதான்.

> "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
> குலத்தின்கண் ஐயப் படும்."

என்று சொன்ன மாதிரிதான் சுவடிக் கவிதை ரஸமற்றது என்று சொல்கின்றவர்களைப் பற்றியும் நாம் சொல்ல வேண்டும்.

"வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்
சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."

என்று அவ்வளவு தூரம் கவிதையில் ஈடுபடுகின்றவர்கள் சொல்கின்றார்கள். அப்படியிருக்க "எனக்குக் கவிதையில் அவ்வளவு ரஸம் தட்டுகிறதில்லை" என்று ஒருவர் சொன்னால், அதை நாம் நன்றாக ஆராய்ச்சி செய்ய வேண்டும். அந்த வியாதிக்கு உரிய மூலகாரணம் என்ன என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பெரும்பாலும் பழக்க வழக்கந்தான் காரணம். உண்பது உறங்குவது போன்ற உலக நாட்டமே நமக்குப் பெரிதாகின்றது. லௌகிகம் என்ற தத்துவத்தின் சாயமே நமது மனதில் படிந்து விடுகின்றது. இந்தச் சாயம் படியாதிருக்க வேண்டுமானால் சிறுபிள்ளையில் இருந்தே கவிதையில் பழக வேண்டும். ஏனென்றால் கவிதைக்கு ஒரு தனிப்பட்ட பயிற்சி வேண்டியதிருக்கின்றது. பயிற்சிக்கு உரியவைகளை உரிய காலத்தில் பயிலாமல் காலம் தாழ்த்திப் பயிலுவதென்றால் எவ்வளவு சங்கடமோ அவ்வளவு சங்கடம் உண்டு கவிதைப் பயிற்சியிலும் காலம் தாழ்த்திப் பயிலுவதானால். மற்றும் கவிதையில் நாட்டம் கொள்வதென்பது ஒரு மதத்தையே அநுஷ்டிப்பதற்கு ஒப்பாகும். நாட்டமில்லை, நாட்டமில்லை என்று பிதற்றுகின்ற கூட்டத்தாரை நாம் சும்மா விட்டுவிடக் கூடாது. நன்றாக அவர்களுடைய மனோ நிலையை ஆராயவேண்டும். அப்படி ஆராய்ச்சி செய்தால் ஏதாவது ஒரு ரகமான கவிதையில் அவர்களுக்கு நாட்டம் இருக்கத்தான் செய்கின்றது என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

1. சாலையிலே ரெண்டுமரம் சர்க்காரைச் சேர்ந்தமரம்
   ஓங்கி வளர்ந்தமரம் உனக்கேற்ற தூக்குமரம்.
2. முள்ளு முனையாலே மூணு குளம் வெட்டினேன்
   ரெண்டு குளம்பாழ் ஒன்றில் தண்ணியுமில்லே

3. இஞ்சிக்கு எரிப்புக் கொண்டாட்டம்—நல்ல
   எலுமிச்சம் பழத்திற்குப் புளிப்புக் கொண்டாட்டம்
   கஞ்சிக்குக் காணம் கொண்டாட்டம்—அந்தக்
   கடைகெட்ட பேதைக்குக் கோபம் கொண்டாட்டம்

என்று வழங்கும் தெம்மாங்குப் பாடல்களிலாவது நாட்டம் இருக்கத்தான் செய்யும். நாட்டம் இல்லை என்கிறவர்கள் கூட இந்த அடிகளைக் கேட்டதும் தாளம் கொட்டி நகைக்கின்றார்கள். இது என்ன பொருந்தாமை என்று எண்ணலாம். உண்மையில் பொருந்தாமைதான. இந்த அநியாயத்திற்கு என்ன சமாதானத்தைத் தேடலாம்? சோம்பேறித்தனந்தான் காரணமே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. அதுவும் மேலான கவிதையைப் படிக்கிறதென்

ருல் இன்னும் சோம்பேறித்தனத்தினுடைய அளவு பெருகிக் கொண்டே போகும். கவிதையினுடைய அடிப்படையான தத்துவத்தை விளங்கிக்கொண்டால் சோம்பேறித்தனத்திற்கே இடம்கிடையாது. * மனிதனுடைய பேச்சு, மனிதனுடைய உணர்ச்சி ஆகிய இவற்றின் தனிப்பட்ட வடிவமே கவிதை என்பது. மேனி அலுங்காமல் அந்த 'தனிப்பட்ட வடிவத்தை' ஆக்கவும் முடியாது நுகரவும் முடியாது. முடியும் என்று சொல்லுவதோ எண்ணுவதோ எல்லாம் வெறும் மௌடால்தனம். கவிதையோடு பழகுவதற்கு ஏதோ பூர்வாங்கமான பயிற்சி மட்டிலும் தேவை என்பதில்லை; தெய்வ அருள் கிடைப்பதற்கு எத்தகைய மனப் பக்குவம் வேண்டுமோ அத்தகைய மனப் பக்குவம் வேண்டும். கம்பனையோ காளிதாஸனையோ படிப்பதென்பது எப்போதும் சாத்யமான காரியமில்லை. அவர்களென்ன அத்தனை இள்ளுக்கீரையா? பெரிய மேதாவியானாலும் கவிஞனுடைய பாவப்பிரவாஹத்தில் மூழ்கித் திளைப்பதற்கு ஏற்றதான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர் 'கெராட்' சொன்ன மாதிரி "நம்மை நம்மினின்றும் இன்னும் இதர சில்லறைப் பிணிப்பினின்றும் விடுவிக்க வேண்டும்." (We must wrest ourselves from ourselves and triviality.) இப்படி யெல்லாம் செய்வது கேவலம் ஆசாரமோ அநுஷ்டானமோ மட்டிலும் இல்லை. அது ஒரு பண்பாடு. "ரஸ ஞானத்திற்கு உபாஸனையே முக்கிய சாதனம்' என்று நூல்கள் முழங்குகின்றன.

இனிமேல் கவிதையானது எவ்வாறு நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது என்பதைப் பார்ப்போம். கவிதை எழுதுவது ஒரு கலையானல் கவிதையை ரஸிப்பதும் ஒரு கலையே. அந்தக் கலையைப் பழகுவதில் எவ்வளவோ சிரமம் இருக்கின்றது. இத்தனை சிரமத்தையும் பொறுத்துக்கொண்டு படிக்க முற்படுகின்ற மாணவன் கடைசியில் கவிதையைப் படிப்பதனல் கிடைக்கின்ற லாபம் யாது என்றே கேட்கின்ருன். கவிதையைப் படிபபதனல் அவனுக்குக் கிடைக்கின்ற லாபம்

* "Poetry is a special perfection of human speech and human spirit." Garrod.

கவிதையும் கவிதா திருஷ்டியுமே என்று சொன்னால் அவனுடைய மனம் சாந்தி அடைந்துவிடப் போகிற தில்லை.

என்னதான் அவன் எதிர்பார்க்கலாம்? வெறும் விருத்தாந்தங்களா என்றால், இல்லை. கவிதை சம்பந்தப் பட்ட மட்டிலும் 'என்னது' என்பது அத்தனை விசேஷ மில்லை. 'எப்படி' என்பதுதான் விசேஷமானது. (The what is indifferent to poetry; it is the how that matters much) Bradley. அதாவது, விஷயத்தைப் பற்றியதில்லை, விளக்கத்தைப் பற்றியதே. பொருளைப் பற்றியதில்லை, வடிவத்தைப் பற்றியதே. எதைப் பொருளாகக் கொண்டு எழுதினாலும் பாதகமில்லை. எழுதியிருக்கிறதை எப்படி எழுதியிருக்கிறான் என்பதே கேள்வி. ஏதாவது ஒரு காவியத்தைப் படிக்கின்றதாக வைத்துக் கொள்வோம். அதனுள் பயின்றுவருகின்ற வெறும் பிண்டமான விஷயத் தொகுதிகளில் இல்லை ரஸம். ஏதாவது கன்னு பின்னு என்ற கட்டுக்கதை கிடைத்தாலும போதும். காவியத்திலோ கதையிலோ வருகின்ற விஷயங்கள் முக்காலே மூன்றுவீசம் கற்பனை தான். அவை கற்பனையே ஆனாலும் உண்மை விருத் தாந்தம் போன்றே மனதைப் பாதிக்கின்றன. பாதிப் பதிலும் வித்தியாசம் உண்டு. உண்மை விருத்தாந்தம் என்றால் அதனால் வருகின்ற இலாப நஷ்டம், ஏற்றம் இறக்கம், தனக்கு வரக்கூடியது பிறருக்கு வரக்கூடியது போன்ற இந்த விஷயங்களிலேயே நமக்கு நாட்டம் செல்லும். கவிதையில் உண்டான விருத்தாந்தம் என்றால் வெறும் கலைப்போக்கை மதிப்பிடுவதிலேயே நாட்டம் செல்லும். ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

மண்ணையும் விண்ணையும் கலக்கிய மைந்தன், குழந் தைப் பருவத்திலேயே கோளரிகளைப் பற்றிவந்து கோப மூட்டி மீளா விளையாட்டயர்ந்த வீரன், இந்திரசித்தன், பாவம், தலையில்லாத உடம்போடு தரையில் கிடப்பதைக் கண்டதும், மண்டோதரி புலம்புகினறாள். "நெருப்புப் பற்றிய பஞ்சுப்பொதி அழிந்தமாதிரி அரக்கர் சேனை யெல்லாம், கேவலம், மனிசனாலல்லவா அழிந்துவிட்டது. இனி மீளப்போவதில்லையே! இந்த நிலைதானே நானை

இலங்கை வேந்தனுக்கும். ஐயோ, என் மனம் பதறுகின்றதே, பதறுகின்றதே" என்று புலம்புகின்ருள்.

"பஞ்செரி உற்றதென்ன அரக்கர்தம் பரவையெல்லாம்
வெஞ்சின மனிசர் கொல்ல விளிந்ததே மீண்டதில்லை;
அஞ்சினேன், அஞ்சினேன், சீதையென்(று) அமுதால் செய்த
நஞ்சினுல் இலங்கைவேந்தன் நாளை இத் தகையனன்ரு."

என்பது அவளது புலப்பம். பிண்டப் பொருளான இந்த சோக நிகழ்ச்சியில் ஏதோ ஓரளவு நமது மனம் பற்றிஞலும் அந்த நிகழ்ச்சியை விஸ்தரிக்கும் கலைப்போக்கிலே நமது மனம் நன்ருக அழுந்துகின்றது. ஆகவேதான் கற்பனையானது உண்மை விருத்தாந்தம் போன்று மனதைப் பாதித்தாலும் கற்பனை பாதிக்கின்ற முறைக்கும் உண்மை பாதிக்கின்ற முறைக்கும் வித்தியாசம் உண்டு. மேலும் வெறும் கதையைத்தவிர இன்னும் ரஸமான விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. பாத்திரங்கள், வர்ணனை, இன்னும் கவிஞனே அவனுடைய இலக்ஷியத்தின் வியாக்கியான கர்த்தாக்களாக அமைந்த பாத்திரங்களோ வெளியிடும் தத்துவங்கள் ஆகிய இவைகளிலெல்லாம் நமக்கு ஈடுபாடு ஏற்படுகின்றது.

எழுதுகின்ற கவிஞன் மகாமேதாவியாக இருந்தால் அவன் பெறக்கூடிய தத்துவ தரிசனங்களை யெல்லாம் நன்ருக வடித்தெடுத்த சொற்களில் புனைந்து நமக்குத் தருவதோடு ஏதாவது ஒரு முறையான வாழ்க்கைத் தத்துவத்தையும நமக்கு உணர்த்திவிடுவான். கவிஞனுடைய மதிப்பை நிதானிப்பதற்குரிய உரைகல் அவன் உருவாக்கும மனப் பான்மையே. (Poets are judged by the frame of mind they induce.)

1. "காயமே வெறும் பொய்யடா
காற்றடைத்த பையடா"
2. "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான் பெருஞ் செல்வமும நில்லா"

என்ற தத்துவத்தை மனதில் ஊட்டலாம். அல்லது "மக்கள் யாக்கையா! அடபாவமே, அதைத்தான் கண்

மூடித்தனமாக உலகம் எப்படி மதிக்கிறது! மக்கள் யாக்கை,

"வினையின் வந்தது; வினைக்கு விளைவாவது;
புனைவாரும் புலால்புறத்திடுவது;
மூத்துவிளிவுடையது; தீப்பிணியிருக்கை;
பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்;
புற்றடங்கு அரவில் செற்றச் சேர்க்கை;
அவலக்கவலை, கையாறு, அழுங்கல்
தவலாஉள்ளம் தன்பாலுடையது
மக்கள் யாக்கை"

என்று மக்கள் உடம்பின் சிறப்பியல்புகளுக்கு இனிய பல்லாண்டு கூறும் தத்துவத்தை மனதில் ஊட்டலாம். பாரதியாரிடம் போய் இதைச் சொன்னால் அடிக்கவந்து விடுவார். "குடும்பத்தில் இருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? அவச்சொல் அன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப்போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலைபோல் நிற்கின்றாள் மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர்விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சியின்போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தைகளை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா! பெற்றவரிடம் கேட்கின்றேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?"

(1) "காண்பதுவே உறுதிகண்டோம், காண்பதல்லால் உறுதியில்லை.
காண்பது சத்தியம்—இந்தக்
காட்சி நித்தியமாம்."

(2) காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

(3) கம்பன் இசைத்த கவியெலாம் நான்
காருகர் தீட்டும் உருவெலாம் நான்
இம்பர் வியக்கின்ற மாட கூடம்
எழில் நகர் கோபுரம் யாவுமே நான்"

என்று முழங்கிவிடுவார். இவர் காட்டும் தத்துவம் இத்தகையது. இவர் உருவாக்கும் மனப்பான்மை இந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. இன்னும் உமர்க் கய்யாம் என்ற பாரசீகக் கவிஞரிடம் சென்று "உமது தத்துவம் என்ன" என்று கேட்டால்,

| | |
|---|---|
| "வெய்யிற் கேற்ற நிழலுண்டு | "A Book of verse beneath the bough, |
| வீசுதென்றல் காற்றுண்டு | A Jug of wine, a loaf of bread—and thou |
| கய்யில் கம்பன் கவியுண்டு | Beside me singing in the Wilderness— |
| கலசம் நிறைய மது உண்டு | O, Wilderness were Paradise enow!' |
| தெய்வ கீதம் பல உண்டு | |
| தெரிந்து பாட நீ உண்டு | |
| வையம் தனில் இவ் வனமன்றி | |
| வாழும் சுவர்க்கம் வேறுளதோ" | |

[தேவி மொழிபெயர்ப்பு]

"மசூதியிலே போய் வீணுக்கின நேரத்தை மதுசாலைக்குச் சென்று ஈடுசெய்வோம்" (Let us make up in the tavern the time we have wasted in the Mosque) என்பது போன்ற தத்துவத்தை அவர் வெளியிடுகின்றார்.

இப்படி ஏதோ ஒரு வகையான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மனப் பான்மையை எவன் உருவாக்குகின்றானே அவன்தான் கவிஞன். அவனுடைய கூற்று நமது ஹிருதயத்தை நன்றாகப் பாதித்துவிடும். ஆனாலும் கவிதையில் சொல்லப்படுகின்ற உண்மைக்கும நிஜ வாழ்க்கையில் காணும் அதே உண்மைக்கும் வித்தியாசம் உண்டு. காவியத்திலோ அன்றி நாடக மேடையிலோ நடைபெறும் கொலைக்கும் நிஜ வாழ்க்கையில் நடைபெறும் கொலைக்கும் வித்தியாசம் கிடையாதா? அம்மா திரிதான். கவலையினால் கண்ணீர் வடித்தாள் என்று நிஜ வாழ்க்கையில் சொல்வதற்கும் "கையால் நிலம் தடவிக் கண்ணீரால் மெழுகினாள்" என்று கற்பனை செய்து கவிதையில் சொல்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டல்லவா?

"ஆவுக்காயினும் அந்தணர்க்காயினும்
யாவர்க்கேனும் எளியவர்க்காயினும்
சாவப் பெற்றவரே தகை வான் உறை
தேவர்க்குந் தொழும் தேவர்களாகுவர்"

என்கிறான் கம்பருடைய இராமன். நிஜ வாழ்க்கையில் அப்படி எத்தனை பேர் சாக முன்வருவார்கள்? ஸர் ஃபிலிப் ஸிட்னி (Sir Philip Sydney) போன்று "உன் ஆத்திரம் என்னுடையதையும் விடப் பெரிது" (Thy necessity is greater than mine) என்று சொல்லி உயிரைத் தியாகம் செய்ய எத்தனை பேருக்கு முடியும்? ஆகவே கவிதை வெளியிடுகின்ற உண்மைக்கும் நிஜ உலகில் காணப்படும் அதே உண்மைக்கும் வித்தியாசம் உண்டு. கவிதையில் வரும் உண்மைகளைச் சாதிப்பதற்கும் அவைகளுக்காக வேண்டி உயிரைக் கொடுத்து இலக்ஷிய வடிவான பெருமையை அவைகளுக்குக் கற்பிக்கவும் வேண்டிய பேராற்றல் கவிதா பாத்திரங்களுக்கு உண்டு. கவிதையில் காணப்பெறும் உண்மைகள் கற்பனையில் பிறந்த உண்மைகள்.

ஐரோப்பாவில் இலக்கிய விமர்சனம் ஆரம்பமானதே இந்த உண்மையைக் கொண்டுதான். அதாவது கவிதை என்பது கற்பனை ஆக்கம் என்ற உண்மை. கவிதை வெறும் கற்பனை ஆக்கம் என்ற காரணத்தால் பிளேட்டோ (Plato) அதை வெறுத்தார். கற்பனை ஆக்கம் என்ற காரணத்தாலேயே அரிஸ்டாட்டில் (Aristotle) என்பவர் அதை விரும்பி, அபாரமான புத்தியைச் செலவு செய்து, கவித்துவம் (Poetics) என்ற அரிய நூலையும் எழுதி வைத்தார். அதுவே ஐரோப்பியர்கள் பெற்ற தலை சிறந்த விமர்சன கிரந்தம். விமர்சன விவிலியம் (Critical Bible) என்று கூட ஆசிரியர் கொராட் (Garrod) அதைப் பாராட்டுகின்றார்.

கவிதையின் ஆரம்பத்திற்கு அரிஸ்டாட்டில் இருவித காரணங்களைக் கற்பிக்கின்றார். அந்த இருவித காரணங்களும் மனித ஜாதிக்கு என்றே இயல்பாக இருந்து

ஆ—பசு. உறை—வசித்தல்.

வரும் இருவித குணங்களே என்கிறர். அந்த இருவித குணங்களும் பின் வருமாறு. ஒன்றைப் பார்த்தால் அது போன்ற ஒரு மாதிரியைத் திரட்டுதல் ஒரு குணம். மற்றொன்று தாள இயல்பு படிந்த சந்தப் போக்கில் நடைபெறும் குணம்.

மாதிரி திரட்டுதல் என்றால் அதன் பொருளென்ன? நிஜ உலக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தான் கவிஞன் கற்பனை உலகத்தைப் படைக்கின்றான். எந்த அனுபவத்தையும் மனித அனுபவம் என்னும் எல்லைக்குள் நின்றே காண்கின்றான். எந்நாட்டவர்க்கும் இறைவனாக விளங்குகின்ற கடவுளையும் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்பதிலும் மேலே கூறிய உண்மை தான் படிந்திருக்கிறது. அவனைத் தென்னாட்டவனாக நினைக்கும்போதுதான் எந்நாட்டவனுக்கும் இறைவன் என்ற உண்மையின் வடிவம் மனதில் பதிகின்றது. திருவனந்தபுரத்தில் இருக்கும் குழந்தையை எங்கள் ஊருக்கு வருகிறாயா என்று கூப்பிட்டால் "அங்கே வந்தா எங்க திருவந்திரம் இருக்குமா" என்று கேட்கிறது. அதனுடைய கருத்தும் என்னவென்றால் ஊர் என்ற வடிவத்தோடு விளங்கும எந்த இடமும் திருவனந்தபுரம் போன்றுதான் இருக்கவேண்டும என்பதுவே. இன்னும் தற்குறிப் பேற்றமாக இயற்கை நிகழ்ச்சிகளை வர்ணிக்கும் போதும், அந்த நிகழ்ச்சிகளின் மீது மனித அனுபவமாகிய சாயத்தையே கவிஞன் ஏற்றுகிறான். சூரிய அஸ்தமனம் இயற்கையான நிகழ்ச்சி என்றாலும் கூட, "ஐயோ கடவுளே, இந்த உலக அநியாயம் தாங்க முடியவில்லையே" என்று எண்ணி சூரியன் கடலில் வீழ்ந்து விட்டான் என்று தற்குறிப் பேற்றமாக வர்ணிக்கும் வர்ணனையிலும் மனித அனுபவத்தின் இயல்பையே பார்க்கின்றோம். ஆகவே கவிஞனுடைய படைப்பெல்லாம் மனித அனுபவம் என்ற எல்லைக்குள் நின்றுதான நிகழ்கின்றது. மனித அனுபவம் என்ற கலவை நீரில் தோயப்பெற்றே வெளிவருகின்றது. இந்தப் படைப்பையும் இருவிதத்தில் ஆராயவேண்டும். ஒன்று கவிதை என்பது கற்பனை ஆக்கம. கவிஞன்சொல்வதெல்லாம் அவன் சொல்லக் கூடிய நினைவில் நிகழுகின்றது என்றால்

அதுவும் இல்லை. எப்போதாவது நிகழ்ந்த ஒன்றுதானு என்றால் அதுவும் இல்லை. கவிஞன் எழுதியது அவனுடைய மேதையினால் படைத்த ஆக்கமேயாகும். ஒருக்கால் அவன் எழுதியது எப்போதோ உண்மையில் நிகழ்ந்ததாக இருந்தாலுங்கூட அதைப்பற்றி அக்கறை இல்லை. அவன் எழுதியது அவனுடைய சிருஷ்டியே ஆகும்.

இனி இரண்டாவது பொருளைப் பார்ப்போம். கவிதா உலகம் தனிப்பட்ட ஒரு சிருஷ்டி உலகமே* ஆனாலும் அதற்கும் சில கட்டுப்பாடுகள் உண்டு. கவிதா உலகம் சட்டதிட்டங்களுக்கு உள்ளான உலகமே. அந்த உலகத்தில் நிகழும் செயல்களுக்கு நோக்கங்கள் உண்டு. காரியங்களுக்குரிய காரணங்களெல்லாம் உண்டு. அந்த உலகத்தில் நிகழுகின்ற செயல்களுக்கெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்பும் உண்டு. கவிதை கற்பிக்கின்ற வாழ்க்கையானது வடிவான வாழ்க்கை. முழுமைத் தன்மை படிந்த வாழ்க்கை. அதன்பால் மூலத்திற்கும் மூலத்தினின்றும் பிரிகின்ற பல்வேறு அங்கங்களுக்கும் நல்ல தொடர்பு உண்டு. காவியமானால் காவியப் போக்கிலே இடையிடையே எழுகின்ற உபகதைகளுக்கும் காவிய கர்ப்பத்திற்கும் தொடர்பு இருக்கவேண்டும். பொருளும் பொருந்தியிருக்கவேண்டும். பாத்திரங்களுடைய குண குணங்களில் விகாரமான தொடர்பின்மை காணப்பெறுதல் கூடாது. கற்பனை சிருஷ்டியாகயிருப்பதால் சிறந்த முழுமைத்தன்மை பெற்றதாக, நல்ல வடிவினதாக, யாதொருவித விகார இலக்ஷணமும் மேவப் பெறுததாக இருக்கவேண்டும். நிஜ வாழ்க்கைக்கும் கவிஞன் படைத்த கற்பனை வாழ்க்கைக்கும் எவ்வளவோ பேதம் உண்டு. நிஜவாழ்க்கை அறைகுறையாகவும், ஒருமைப்பாடு அற்றதாகவும், முண்டு முடிச்சுகள் மேவப் பெற்றதாகவும், கதம்ப நிலையிலும் இருக்கின்றது. ஆனால் கற்பனை ஆக்கத்தாலான வாழ்க்கையோ பரிபூரணத்வம் வாய்க்கப்பெற்றதாகவும் கலை இலக்ஷணம் வாய்ந்ததாகவும் இருக்கும்.

இனி இவ்வாறான சிருஷ்டியினால் ஏற்படும் இலாபம் என்ன என்பதைப் பார்ப்போம். தண்ணிழல் தவழும்

சோலை போன்றோ, ஆரோக்ய நிலையம் போன்றோ, அன்றி உலக இன்னல்களில் முட்டுண்டு, மோதுண்டு, அல்லல் பட்டு, நைந்து நலிவுற்றுத் திண்டாடி நிற்கும் மனத்திற்குச் சாந்தி அளிக்கும் சாந்த நிலையமாகவோ மேலே குறிப்பிட்ட கற்பனு சிருஷ்டி துணை செய்கின்றதா? எந்த விதத்தில் அதனுல் ஆன்ம நலனைச் சீர்தூக்கமுடியும்? இந்தக் கேள்விக்கு யார் கூறும் விடையைக்காட்டிலும் கவிஞர்கள் கூறும் விடையே மேலானது.

“ புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்ருகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச்
சவியுறந் தெளிந்து தண்ணென் ஒழுக்கமுந் தாங்கிச் சான்ருேர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர்கண்டார்.”

இது கம்பருடைய வாக்கு. “சான்றோர் கவி புவியினுக்கு அமைந்த சிறந்த அணியாகும். ஆன்ற பொருளைத்தரும். தேவர் உணவுக்கு ஒத்த சுவைப் புலங்களிலெல்லாம் படிந்ததாக இருக்கும். பல்வேறு ஒழுக்கத் துறைகளிலும தத்துவத் துறைகளிலும் படர்ந்து அரிய பொருளையெல்லாம் எளிதில் கருத்தைக் கவரும் அழகுடன், வடித்துக்கொடுக்கும்.” கவிதையினுடைய இலக்ஷணத்தையும் பலனையும் ஒருசேரக் குறிப்பதாக அமைந்துள்ளது இந்தப் பாடல். ‘கவிஞனது நம்பிக்கை’ (Poet's Hopes) என்ற தலைப்பின் கீழ் கீட்ஸ் (Keats) என்ற ஆங்கில மகா கவி சொல்லும் பதில் யாது என்று பார்ப்போம்.

“The Patriot shall feel
My stern a arm and unsheathe his steel”

தீக்கனலும் கீதத்தை தேசாபிமானி
தினம் தெரிந்து பாடி
திரளான உணர்ச்சி வெள்ளம் திரை சுருட்டி
மன வெளியில் அலைகள் மோத
நாற்றிசையும் புகைஎழும்ப நமன் கண்டு
குடல் பதற நாட்டிற்காக

ஆற்றுவேன் வாளுருவி அரியபெரும்
போரென்பான் அசனிபோன்றே (இடி)

or in the senate thunder out my numbers
To startle princes from their easy slumbers.

மன்னவனும் மன்னவையும் மனங்குலைந்து
தொடைநடுங்க மாற்றம் கூறி
என்ன முறை என்னவிதம் என்னேயோ
ஆட்சியென இடித்துக் காட்டிப்
பன்னலமும் பலவளமும் பாலிக்க
ஆட்சிமுறைப்படுத்தும் பண்பை
என் கவிதை என் மொழிகள் யாவர்க்கும்
உணர்த்திடுமோர் இயற்கைத்தாமே

The sage will mingle with each moral theme
My happy thoughts sententious ;

தத்துவத்தின் தனிப் பொருளைத் தவநலத்தால்
உணர்கின்ற தபசிதானும்
புத்தமுதக் கவிதைகளைப் பொருளுணர்ந்து
போதமுடன் பொருத்திக் கூட்டிச்
சித்தநலம் வாய்ந்திடவும் தெய்வ அருள்
சிதையாஜர் தெளியும்கூட
நித்தநித்தம் பரிவுடனே நெடும்பணிகள்
புரிந்திடவும் நேர்வானன்றே

then.............. ...... ..............he will
with lofty periods when my verses fire him.

யான் மொழிந்த பாடல்கள் இன்பவெறி
ஊட்டிடவே ஞானிதானும்
வான் நிமிர்ந்த போதத்தை வளமார்ந்த
சொற்களிலே வடித்துக்கூட்டி
நான்மறையோ ஞானமிர்தோ நாவலர்க்கு
வாய்த்திட்ட நல்விருந்தோ
தேன்மழையோ எனப் பலரும் திகைத்திடவே
ஞானத்தைத் தெரிப்பன அன்றே.

Lays have I left, of such a dear delight
That maids will sing them on their bridal night

சிருங்கார மாயிசைத்துச் சேயிழையார்
 நேயருடன் தீர்வொன்றின்றிப்

பெருங்காதல் விளைத்திடவும் பேரின்ப
 வெள்ளத்தில் பெயர்ந்திடாது

ஒருங்காக ஆழ்ந்திடவும் உணர்விறந்து
 திளைத்திடவும உற்றபேறாய்

வரும் பாடல் என்பாடல் வாழ்வுக்கோர்
 நல்மருந்து வரிசையெனவே !

To sweet rest
Shall the dear Babe upon its mother's breast
Be lulled with songs of mine.

தேன்சுவையும் மதுச்சுவையும் தித்திக்கும்
 கனிச்சுவையும் தேவாமிர்தும்

தான்கலந்து குழைத்ததொரு தனிப்பாகு
 எனப்போற்றும் தகையதாக

யான் மொழிந்த பாடலினை இசைகூட்டித்
 தாய்மார்தம் இளஞ்சிறாரை

ஆன்றபெரு மகிழ்வுடனே ஆராரோ
 என இசைக்க அயர்வரனறே.

[ ஆசிரியர் மொழிபெயர்ப்பு. ]

இவ்வாறான நலங்கள் இக்கற்பனை ஆக்கங்களான கவிதையினால் கிடைக்கின்றன. மற்றும் கவிதை கற்பிக்கின்ற கற்பனை உலகமானது நிஜ உலகைவிட எத்தனையோ மடங்கு அழகுடையதாக இருக்கின்றது. கற்பனை ரதத்தில் ஏறிச் சென்றால் நிஜ உலகில் காணவேண்டுமென்று எத்தனைநாள் தவித்தாலும் காணமுடியாத பேரின்பக் காட்சிகளையெல்லாம் கண்டு களிக்கலாம். என்றாலுங்கூட கற்பனை சிருஷ்டி அழகுடையதாக இருந்தாலும் உண்மையுடையதாக இருக்குமாஎன்ற கேள்வி எழலாம்.

கவிதை என்பது ஒரு கலை. ஒரு சிருஷ்டி சாதனம். அது மக்களிடையே இயல்பாகவே நிலவி வருகின்றது. அதை அழிக்கவே முடியாது.
"மழைபெய்த வாசலிலே மண் அளையப் பிள்ளை இல்லை"
என்று தாய் அழுவதிலும்,

"மந்திரிமார் வந்துநிற்பார் மகமேரு வாசலிலே"
காசிப்பட்டு, இனி, கனத்த சவடியிலே
ஆசை இழந்தேனே அநியாயப் பாவிமகள்."

என்று கணவனைப் பறிகொடுத்த மனைவி அழுவதிலும்,

"பல்லக்கில் அம்மான் பவனி வரும்பொழுது
மெல்ல மடிமீதிருந்து விளையாடும் பைங்கிளியோ."

"வெட்டிப் போட்ட மருதங் கொப்பிலே
தொத்திவந்த கிளியோ"

"கரும்புருக - தேனுருக - கண்டார் மனமுருக,
எலும்புருகப் பெற்றரசே ஏன் அழுதாய் கண்சிவக்க"

என்று இவ்வாறு அருமையுடன் தாய் தாலாட்டுவதிலும் எவ்வளவோ உணர்ச்சி பாவம் நிறைந்திருக்கின்றது. கவிதா இலக்ஷணமே துடியாகத் தோற்றமளிக்கின்றது. இப்படிச் சொல்கின்ற தாய்மார் மழைக்குக்கூட பள்ளிக்கூடங்களில் ஒதுங்கி அறியமாட்டார்கள். அப்படியிருந்தும் இப்படியெல்லாம் கண்ணிகள் தொடுக்க எங்கே கற்றுக்கொண்டார்கள்? அதெல்லாம் கருவிலே அமைந்த திரு என்றுதானே சொல்லவேண்டும். கவிதையாத்தல் என்பது, இயல்பாகவே பேசுதல், மூச்சு விடுதல் போன்று, ஒரு இயற்கையான தன்மையாகவே அமைந்திருக்கிறது. ஒரு சில புண்ணிய சீலர்களுக்கு மட்டிலும் எல்லையற்ற அளவில் கவித்துவ சக்தி பெருகிக் கிடக்கின்றது. நாம் கவிதையில் நாட்டம் செலுத்துவது என்ன ஒரு உண்மையை வெளியிடுகிறதென்றால், உண்மையைக் காட்டிலும் அழகினை நாம் அதிகம் மதிக்கின்றோம் என்றதையே. கரும்பு உருகுமா? தேன் உருகுமா? கண்டார் மனமெல்லாந்தான் உருகிவிடுமா? இல்லை. அத்தனையும் உண்மையே இல்லை. ஆகவும் ஆகாது! ஆனாலுங்கூட எவ்வளவு அழகாக இருக்கின்

றது! நெஞ்சையே கௌவுகின்றதே! சாக்ஷாத் உண்மை கூட இவ்வளவு தூரம் நெஞ்சைக் கவர்ந்து விடாதே! கற்பனைக்கு உண்மையைவிட அதிகப்படியான ஆதிக்கம் செலுத்தும் சக்தியல்லவா வாய்ந்திருக்கிறது! ஆகையினுலேதான் அறிஞர்கள் அழகுடைய ஒன்று பட்டவர்த்தனமான உண்மையைவிட அதிக உண்மையானது என்று கொள்கின்றார்கள்.

இதுகாறும் மாதிரி திரட்டுதல் என்றதை ஒட்டி ஒருசிறிது ஆராய்ந்தோம். மனிதனுக்கு உண்டான இயல்பான இரு குணங்களில் அது ஒன்று என்பதையும் பார்த்தோம. இனி அடுத்த பண்பாகிய சந்த அமைப்பு அல்லது வண்ணத்தின் தத்துவம் என்பதைப்பற்றி ஆராய்வோம்.

கற்பனு சிருஷ்டிக்கு மூலாதாரமான இயற்கை - இயல்புதான் வண்ண விஸ்தாரங்களிலும் ஈடுபடச் செய்கின்றது. வாழ்க்கை என்பது ஏதோ கட்டுப்பாடற்ற க்தம்பம். கவிதையானது அதை ஒரு கட்டுப்பாட்டினுள் அமைத்துவிடுகின்றது. அறிஞர்கள் பலர் இயற்கை முழுவதும ஒரு வகை வண்ணத்தை நாடியே இயங்குகின்றது என்கின்றார்கள். உண்மையும் அதுவே.

"தாளம் தாளம் தாளம்
தாளத்திற்கோர் தடையுண்டாயின்
கூளம் கூளம் கூளம்"

என்கிறார் பாரதியார். அதில் எவ்வளவோ உண்மை இருக்கின்றது. இது ஒரு அருமையான பண்பு. வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாக இருக்கும் நிலையில் அவைகளுக்கு மிகுதியான வேகமோ ஆற்றலோ கிடையாது. ஆனால் ஏதேனும் ஒரு விதமான தாளக்கட்டினில் அமைத்துவிட்டால் அவைகளுக்கு என்றுமே இல்லாத வேகம் பிறந்துவிடுகின்றது. சாதாரணமாக நமது கையால் தூக்கி எவ்வளவு வேகமாக எறிந்தாலும் சுவரின் மேல்பூச்சைமட்டிலுமே தாக்கவல்ல கல்லானது, மருந்தின் வேகத்தாலோ இயந்திர சாதனத்தின் மூலமாகவோ தூரத்தப் படுமேயானுல், ஏழு சுவரையும் துளைத்து, அப்பாலுள்ள மரத்தையும் துளைத்து, அதற்கும் அப்பால்

செல்லும். மருந்தோ இயந்திர சாதனமோ கல்லின் வேகத்திற்கு எவ்வளவு துணை செய்கிறதோ அவ்வளவு அளவில் சந்தம் வார்த்தைகளின் வேகத்திற்குத் துணை செய்கிறது.

(உ-ம்) இராமனுக்கு இளையவனான இலக்ஷ்மணன் நிகும்பலை யாகத்தை அழிக்கும் காரணமாக இந்திரசித்துடன் போர் புரிகின்றான். அப்போது அவன விடுத்த அம்புகளில் சில வளைந்தோடின, சில பொரிந்தோடின, சில புகைந்தோடின, சில எரிந்தோடின, சில கரிந்தோடின. இப்படியாகச் சொல்லிச் சொல்லி பதங்களை நொண்டி அடிக்க விடாமல் ஒருவித வண்ணத்தில் அமைத்து விட்டால் கேட்பதற்கு வெகு சுகமாக இருக்கும்.

(சற்று இசைகூட்டி நீட்டிச் சொல்லவும்)

தன்ன - தன, தன்ன - தன, தன்ன - தன, தன்ன

“ புரிந்தோடின பொரிந்தோடின புகைந்தோடின
புகைபோய்
எரிந்தோடின கரிந்தோடின இடம்ஓடின வலமே
திரிந்தோடின விரிந்தோடின செறிந்தோடின
திசைமேல்
சரிந்தோடின கருங்கோளரிக் கிளையான்விடு சரமே.”

இப்பொழுது பாட்டை வாசித்தால் எத்தனை சுகம்! எத்தனை சுகம்! சந்த ஒலியின் பெரு முழக்கம் செவி நிறைந்து மண்டுகின்றது. இதை விட்டுவிடுவோம். ஒரு வேடிக்கைப் பாட்டைப் பார்ப்போம்.

தன தன - தானன, தன தன - தானன,

“ நிலா நிலா ஓடிவா நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா மல்லிகைப்பூக் கொண்டுவா.”

இதைப் பாடிய தாய் எந்த இலக்கணத்தைப் படித்து இப்படியான சந்தத்தைக் கூட்டினாள்? இயற்கையிலேயே அந்தக் குணம் இருக்கின்றது. பஞ்ச பூதங்களின் இயக்கமே ஒருவகை வண்ணப்பாடு தழுவிய இயக்கம். ஏதோ நம்மாலெல்லாம் அறிய முடியாத ஒருவகை வண்ணத்தைத் தழுவி அவைகள் இயங்குவதினாலேதான்

பல்வகையான பொருள்களும் உயிர் இனங்களும் தோன்றுகின்றன. ஜன சமூகமே சட்டம், திட்டம், ஐதீகம் முதலிய நியதிகளால் ஆன ஒரு வண்ணத்தைத் தழுவி இயங்குவதினால்தான் உலகச் சக்கரமானது உருளுகின்றது. இன்று போர் நடக்கிறதென்றால் புதுவகையான ஒரு வண்ணத்தில் ஜன சமூகம் இயங்க வேண்டும் என்ற நோக்கத்தினாலேதான். வண்ண பேதங்களினாலே புதுப்புதுத் தோற்றங்களெல்லாம் ஏற்படும். ஒரு விதமான வண்ணத்தைத் தழுவி காற்றானது இயங்கினால் ஒருவிதமான தோற்றம் நிலைக்கும். அந்த வண்ணத்திலேயே மாற்றம் ஏற்படுவதானால் தோற்றத்திலும் மாற்றம் ஏற்படும். சுருங்கச் சொன்னால் சராசரங்கள் அனைத்துமே தனித்து இயங்குவதிலும் கூடி இயங்குவதிலும் ஏதோ ஒரு விதமான வண்ணத்தைத் தழுவியே இயங்குகின்றன.

"சாட்டிநிற்கும் அண்டமெலாம் சாட்டையிலாப் பம்பரம்
ஆட்டி வைக்கும் அண்ணல்" போல்

இந்தப் பிரபஞ்சம் அனைத்தையுமே ஏதோ அற்புதமான, அறிவரிய ஒருவகை வண்ணத்தைத் தழுவியே இயங்கும்படி செய்கின்றான். ஆட்டப்படும் பொருள் இயங்கும்போது ஆட்டும் பொருளும் இயங்க வேண்டியது தானே. ஆகவே அவனும் இயங்குகின்றான். ஆனந்தக் கூத்தாடுகின்றான். பிரபஞ்சமானது என்னென்ன விதமான வண்ணத்தையெல்லாம் தழுவி இயங்க முற்படுகின்றதோ அந்தந்த வண்ணத்தின் மர்மத்தைக் கவிதையானது வார்த்தைகளாலேயே உணர முற்படுகின்றது என்றே சொல்லிவிடலாம். பிரபஞ்சத்தின் வண்ணபேதம் புதுப்புது சிருஷ்டிக்குத் துணை செய்வது போன்று கவிதையிலுள்ள வண்ண பேதங்களும் மனிதனுடைய பேச்சில் புகுதரும் வண்ண பேதங்களும் புதுப்புது சிருஷ்டிகளுக்குத் துணைசெய்கின்றன.

கவிதையில் மிகவும் துடியான அம்சங்களுள் ஒன்று வண்ணம். கவிதை அதை மிக நன்றாக உபயோகிக்கின்றது. வண்ணம் என்பது ஒரு வகையான கட்டுப்பாட்டைத் தழுவி இயங்குகின்ற ஓசை இயக்கம். இந்த

ஓசை இயக்கத்தை நமது தமிழ் அறிஞர்கள் பலவாருகப் பிரித்திருக்கின்ருர்கள். வண்ணங்களிலேயே நூறுவகை கூறுகின்ருர்கள். (உ-ம்) தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசைவண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை வண்ணம் என்று இப்படியே போய்க் கொண்டிருக்கும்.

தூங்கிசை வண்ணமானது கிழட்டுப் பெண் யானை போன்றும், ஒந்தியோ நாரைப் பறவையோ நடப்பது போன்றும் எழுச்சியும் விரைவும் இன்றித் தாழ்ந்து இசைப்பது. இந்த வண்ணத்தில் குற்றெழுத்துக்களைக் கொண்ட அகவல் சீர்கள் பெரும்பாலும் பயின்றுவரும்.
(உ-ம்)

" வினையொழி பொழுதின்கண் செல்வமே போல அஃகிச்
சுனையெழு குவளையும் ஆம்பலும் தீந்து வாடிக்
கனையெரி கழை தீண்டிக் காடுவெந் தோடகில்லா
நனைகவுள் எழில்வேழம் நாவசைந் தெய்தியாங்கு"

வல்லிசை வண்ணத்திற்கு ஒரு உதாரணம். இதில் பெரும்பாலும் பயின்று வருவன வல்லெழுத்துக்களே.

" வட்டொட்டி யன்ன வணர்முடப் புன்னைக்கீழ்க்
கட்டிட்டுக் கண்ணி தொடுப்பவர் தாழம்பூத்
தொட்டிட்டுக்கொள்ளும் கடற்சேர்ப்ப நின்னொடு
விட்டொட்டி உள்ளம் விடாது நினையுமேல்
ஒட்டொட்டு நீங்காதே யொட்டு"

குறுஞ்சீர் வண்ணம். இது குற்றெழுத்தே அசையாக நிற்கும் சீர்களைப் பெற்று வருவதாகும். (உ-ம்)

" எடுமெடு மெடுமென எடுத்ததோர்
இகலொலி கடலொலி இகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும்விடும் எனுமொலி மிகைக்கவே."

இப்படியாக இன்னும் உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

வண்ணம் என்பது ஓசை இயக்கம். ஆங்கிலத்தில் இதை ரிதும் (Rythm) என்று வழங்குகின்ருர்கள்.

கிட்டத்தட்ட இருபதங்களும் ஓரளவில் பொருந்தும். ரிதும் என்ற பதத்திற்கு, நல்ல, திட்டவட்டமான, ஒரு பொருளைக் கற்பிக்க அறிஞர்கள் யோசனை செய்கின்றார்கள். ஏனென்றால் அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. எல்லாக் கலைகளுக்குமே இந்த ரிதும் என்ற பண்பு உண்டு என்கிறார்கள் ஒரு சாரார், ஓவியக்கலைக்கு உண்டு, சிற்பக் கலைக்கும் உண்டு, மனைக் கலைக்கும் (architecture) உண்டு என்று சில அறிஞர்கள் சாதிக்கின்றார்கள். இவைகளுக்கெல்லாம் உண்டு என்று சொல்வதானால் இட்டுக்கட்டிச் சொல்லவேண்டுமே யொழிய வேறில்லை என்கிறார்கள் மற்றொரு சாரார். அவர்களுடைய நியாயம் பின்வருமாறு.

சரியானபடி சொல்கிறதானால் 'ரிதும்' என்ற பண்பு இயக்கம் உடைய ஒன்றினுக்கே பொருந்தும் என்கிறார்கள். உதாரணமாக, நாடகம், நடனம், கவிதை, இசை ஆகிய இவைகளுக்குத்தான் உண்டு என்பது அவர்களுடைய கொள்கை. சங்கீத வித்வானிடத்தில் சென்று இயக்கம் அற்ற ஒன்றினுக்கு இந்த ரிதும் என்ற பண்பு உண்டென்றால் "சீ, சீ" என்று உதறிவிடுவான். ஓசையற்ற ஒன்றில் ஒருமைப்பாடு அல்லது ரஞ்சகம் (Harmony) இருக்கிறது என்றால் எவ்வளவு கேவலமோ அவ்வளவு கேவலம் என்று மதித்துவிடுவான். நிற்க. இனி நாம் கவிதைக்கு வருவோம். இயக்கம் காரணமாகக் கவிதைக்கு ரிதும் உண்டு. இசைக்கும் அப்படியே. என்றாலும் சிறிது வேறுபாடு அமைந்துள்ளது. கவிதை வார்த்தைகளால் ஆனது. இசை ஒலியால் ஆனது. வார்த்தைகளுக்கு நேர் பொருள் தொனிப்பொருள ஆகிய பொருள்கள் உண்டு. இசைக்கு அவ்வாறில்லை. ஆகவே கவிதையிலுள்ள ரிதுமானது ஓசையும் பொருளும் உரிமையுடன் பொருந்துவதைப் பொறுத்திருக்கிறது. இவ்வாறாக எல்லாம் அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஓசையானது பாவத்தின் நீர்மைக்கு ஏற்றபடி பொருளுடன் ஒத்துவருமாயின் கவிதை ருசிகரமாகவே இருக்கும். (உ - ம்)

தன்ன-தான தன, தன்ன-தான தன,
தன்ன-தான தன தனனா

"செருகு கொந்தளகம் ஒருகை மேலலைய
ஒருகை கீழலைசெய் துகிலொடே
திருஅனந்தலினும் முகமலர்ந்துவரும்
தெரிவைமீர் கடைகள் திறமினோ."

இப்பொழுது வாசகர்கள் இருகையும் கொண்டு (தன்ன - தான தன) என்று எடுக்கும்போது ஈரடித் தட்டாகவே தட்டிக்கொண்டு பாடலை வாசிக்கவேண்டும். பாட்டின் பொருள் பின்வருமாறு: போருக்குப் போன நாயகன் வரவில்லை. குறிப்பிட்ட காலம் வந்துவிட்டது. மோருக்கும் பாலுக்கும் ஒவ்வொன்ருகப் பொட்டிட்டுக் கணக்குப் பார்ப்பதுபோன்று நாளின் செலவை விரல் கொண்டு பொட்டிட்டுப் பொட்டிட்டுக் கழித்ததில் கை விரலும் தேய்ந்துபோய்விட்டது. தூக்கமோ கிடையாது. ஏதோ ஒருநாள் அயர்ந்து நித்திரை வருகிறது தலைவிக்கு. நாயகன் வருகிறதாகக் கனவு தட்டுகின்றது. கதவைத் திறக்க வருகின்ருள். இந்த அனுபவத்திலுள்ள விசேஷத் தன்மை என்னவென்ருல், அயர்ந்த நித்திரையிலும் முகமலர்ச்சியோடு வருவதுதான். திரு அனந்தல் என்ருல் அயர்ந்த நித்திரை என்பது பொருள். சாதாரணமாக அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்துள்ள ஒரு பாத்திரம் மலர்ந்த முகத்தோடு வருவது என்பது ஒரு அசாதாரணமான காரியம். சுவாசிக்கின்ற மூச்செல்லாமே தலைவன்மீதுள்ள அன்பாக இருப்பதால், நிறைந்த அன்பானது நித்திரையிலும் பரிமளிக்கின்றது. இந்த அற்புதமான உண்மையைக் குறிப்பிடும் பதங்கள் 'திரு அனந்தலினும்' ஒன்று. 'முகமலர்ந்துவரும்' மற்ருென்று. நாம் தாளம் இட்டுக்கொண்டே வந்தால் இந்த இரண்டு பதக் கூட்டுகளிலும் தாளம் வந்து பொருந்துவதைப் பார்க்கலாம். இப்படியாக ஓசையும் பொருளும் ஒருசேரப் பொருந்தும் அழகில் பாட்டு அமைவது மிகவும் கஷ்டம். பொருளின் உண்மையைக் கைதூக்கி விடும் கருவியாக அமைந்துள்ளது 'ரிதும' என்ற பண்பு.

இதுகாறும் 'ரிதும்' அல்லது வண்ணம் என்ற பண்பினைப் பற்றி ஒரு சிறிது ஆராய்ந்தோம். வண்ணம் என்பதை ஒரு குறிப்பிட்ட பாடல் இனத்திற்கென்று கொள்ளாது 'ரிதும்' என்ற பொருளில் எடுத்து அதை

விரிந்த முறையில் பார்வையிட்டோம். அதற்கு விசேஷமான பொருளும் கற்பித்தோம். ஆதியிலேயே பார்த்தோம் இயற்கையே ஒருவித வண்ணத்தை நாடித்தான் இயங்குகின்றது என்பதாக. அறிஞர்கள் அவ்வாறு கொள்கின்றார்கள். அந்த வண்ணப்பாடே மனிதனுடைய பாஷையிலும் படிகின்றது. அதிலும் விசேஷமாகப் பாட்டுமுறையில் பயிலப்பட்டுவரும் மனித பாஷையில் நன்றாகப் படிந்து அழகு செய்கின்றது.

தானு - ன, தன்னு - ன, தன்னன தன்னன, தானு - ன. "பூவேபூ புளியம்பூ பொன்னிறக் கொண்டைக்குத் தாழம்பூ". இங்கே 'பூவே' என்று எடுக்கும்போது தாளம் கொட்டவேண்டும். ஈரடித்தாளமிட்டால் இந்த கிராமிய அடியின் வேடிக்கைப் போக்கு நன்றாகத் தெரியும். புளியந்தோப்பில் சில கிராமப்பெண்கள் விளையாடுகின்றார்கள். சூரிய ஒளியில் அவர்களுடைய செம்பட்டை முடி மின்னுகின்றது. இரண்டொரு உதிர்ந்த புளியம்பூ ஒரு பெண்ணின் முடி மீது காணப்படுகின்றது. இந்த அழகைக்கண்டு வியந்த ஒரு பெண் கொஞ்சம் புளியம் பூக்களை அள்ளி 'இதுதான் உன் பொன் முடிக்குத் தாழம்பூ' என்று சூட்டுகின்றாள். புளியம்பூ, பொன்னிறம், தாழம்பூ ஆகிய பதங்களில்தான் கேலிச் சுவை படிந்திருக்கின்றது. தாளமிட்டால் அப் பதங்களில் வந்து தாளம் விழும். இவ்வாறு கவிதைக்கு மிக அழகு செய்கின்றது ரிதும் என்ற பண்பு. இப்படியாக ரிதுமானது கவிதையை அழகு செய்வதைக்கொண்டு இன்னொரு உண்மையையும் கூறிவிடலாம். கவிதையானது மனித பாஷையையும் மனிதனுடைய கருத்தையும் வண்ண அலங்காரம் மேவும்படி செய்வதோடல்லாமல் சகல பொருள்களையுமே வண்ண அலங்காரத்தோடு தோன்றும்படியாகச் செய்துவிடுகின்றது என்றும் சொல்லலாம். மனித பாஷையை எப்படிச் செப்பனிடுகின்றதோ அப்படியே மனித வாழ்க்கையையும் கவிதையானது செப்பனிடுகின்றது. உலகத்தையும் செப்பனிடுகின்றது.

எவ்வளவுதான் செப்பனிட்டாலும் கவிதையானது கற்பனசிருஷ்டிதானே என்று சொல்லலாம். கற்பனு

சிருஷ்டி என்றாலுங்கூட உண்மையென்றே நம்பும்படி செய்துவிடுகின்றது.

" பொன்கொண் டிழைத்த மணியைக்கொடு பொதிந்த
மின்கொண் டமைத்த வெயிலைக்கொடு சமைத்த
என்கொண் டியற்றிய எனத் தெரிகிலாத
வன்கொண்டல் விட்டுமதிமுட் டுவன மாடம்.

என்ற வர்ணனை கற்பனைதான். ஆனாலும் அவ நம்பிக்கையை ஒதுக்கிவிட்டு நம்முடைய மனமானது நம்ப முனைந்துவிடுகின்றதல்லவா? இதைத்தான் *( Willing suspension of Disbelief ) என்று ஒரு ஆங்கில அறிஞர் கூறுகின்றார்.

கவிதைக்கும் வண்ணத்திற்கும் உண்டான ஆற்றல் அளவிடமுடியாதது. அவைகள் மஹாமந்திர சக்தி வாய்ந்த சாதனங்கள். உணர்ச்சிப் பிரளயத்தை உண்டாக் கவல்ல உயர்ந்த சாதனங்கள்.

" பாட்டுக்கொரு புலவன் பாரதியடா—அவன்
பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினனேடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனே னேயடா—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப் பாயேடா?

என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பாரதியாரைப் பாராட்டிச் சொன்னார்களென்றால் முற்றி லும் உண்மை. அந்த உண்மை-உணர்ச்சியின் மொழி பெயர்ப்பே மேலே குறிப்பிட்ட பாடல்.

இனி கவிதை பற்றிய வேறு சில பண்புகளைப் பார்ப் போம். கவிதையிலே போய் ஐந்தையும் மூன்றையும் கூட்டினால் எட்டு என்பது போன்ற பட்டவர்த்தனமான உண்மைகள் உண்டா என்று கிளறிப் பார்க்கக் கூடாது. கவிதையானது வாழ்க்கையை ஒரு விதமாக நிதானிக் கின்றது. ஒரு குறிப்பிட்ட செய்யுளை எடுத்துக்கொண் டால் அது நமக்கு வாழ்க்கையின் ஒரு அம்சத்தை ஒரு குறிப்பிட்ட வடிவில் எடுத்துக் காட்டுகின்றது. அத னுடைய தொழிலே வாழ்க்கை வர்ணனை ஜாலத்தின்

*(மனமார அவநம்பிக்கையை ஒதுக்குதல்)

மர்மத்தை உணர்த்துவதுதான். இலக்கியத் தோற்றமே வாழ்விலிருந்துதான். வாழ்விற்கே அது உரியது. வாழ்விற்கு வேண்டியே அது நிலைபெற்றிருக்கிறது. (Literature is born out of life, belongs to life and exists for life) என்கிறார் ஹட்சன் (Hudson) என்ற அறிஞர். அநேகர் இன்னும் மண்டையை உடைத்துக் கொள்கின்றார்கள், கவிதை சொல்கிறது அத்தனையும் உண்மையா என்று.

இந்தக் கட்சிக்கு சமாதானம் சொல்லு முன்னர் மனத்தினுடைய இயல்பான தன்மையை ஆராய வேண்டும். கவிதையில் துளிகூட நாட்டமில்லாதவன் இருக்கவே முடியாது. கொஞ்சமாவது அவனுக்கு நாட்டம் இருக்கத்தான் செய்யும். துளிகூட நாட்டம் இல்லையென்றால் அவனுக்கு வாழ்க்கையிலேயே விருப்ப மில்லை என்பதுதான் பொருள். கவிதையில் நாட்டம் செலுத்துதல் என்பது மனத்திற்கு இயற்கையாக அமைந்த பண்பு. இதை எப்படித்தான் துடைத்துவிட முடியுமோ தெரியவில்லை. கவிதையில் நாட்டம் என்றால் கற்பனையிலும் நாட்டந்தான் என்றாகும். அதிகப்படியான நாட்டம் என்றில்லா விட்டாலும் ஏதோ ஓரளவுக்காவது உண்டு என்பதே பொருள். இந்தக் கற்பனை நாட்டத்தை யும் உதறித் தள்ளிவிட முடியாது. ஏன் அப்படி?

நம்முடைய வாழ்க்கையில் எத்தனை பகுதி பகுத்தறி வின் ஆதிக்கத்திலிருக்கின்றது? எடுத்ததற்கும் தொடுத் ததற்கும் நாம் பகுத்தறிவு கொண்டே ஆராய்ச்சி செய் கின்றோமா? தினந்தினமும் செய்கின்ற ஒவ்வொரு செயலை யும் எடுத்துக்கொள்வோம். காதலோ, கோபமோ, நன்மையோ, தின்மையோ, எதுவாயினும் சரி, செய்கின்ற காரியம் ஒவ்வொன்றையும் முன்னிட்டு நாம் பகுத்தறிவு விசாரணை செய்கிறோமா என்றால், இல்லை. அற்ப சொற்பந் தான். நாம் ஈடுபடுகின்ற அநேக காரியங்களில் நம்மை அறியாமலே ஈடுபடுகின்றோம். யதார்த்தத்தைப் பேசுதல் என்ற ஒரு கட்சியை எடுத்துக்கொள்வோம். திருநெல் வேலியில் நடைபெற்ற தேரோட்ட விழாவில் சுமார் இத்தனை ஜனங்கள் வந்திருந்தார்கள் என்று சொல்வதை, ஆர்வமிகுதியால், " கூட்டமா! எள்ளுப்போட இடமில்லை!

அடடா, ஊசி குத்த இடமில்லை!'' என்கிறார் ஒருவர். இப்படிச் சொல்வது படித்துச் சொல்வதும் ஆகாது, படைத்துச் சொல்வதும் ஆகாது. இவ்வாறு சொல்வது வழக்கு என்றாலும் அப்படியெல்லாம் சொல்வது மனத்திற்கு அமைந்த இயல்பான பண்பு. ஆனாலும் இப்படிச் சொல்லலாமா? 8000 அடி நீளமும் 160 அடி அகலம் உள்ள ரதவீதியில் தேர் கவர்ந்த சதுர அடி 2400 போக மீதமுள்ள 12 லக்ஷத்து எண்பத்தேழாயிரத்து அறுநூறு சதுர அடிகளில் 2 சதுர அடிக்கு ஒருவராக நின்ற ஜனங்கள் ஆறு லக்ஷத்து நாற்பத்து மூவாயிரத்து எண்ணூறு பேர் என்று தான் சொல்லவேண்டும். இல்லையா? இப்படிச் சொன்னால் உண்மையைக் கூறுதல் ஒரு குணம் என்பது போய் அதுவும் ஒரு வித்தை என்றே கொள்ளப்படும். உண்மையில் அப்படிச் சொல்லிவருகின்றோமா என்றால், இல்லவே இல்லை. இன்னும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். நமது கல்யாணங்கள் மற்றும் சடங்குகளை எடுத்துக்கொள்வோம். சடங்குகளை நடத்துவதற்குரிய காரணங்களோ அவற்றால் வரும் பயனோ இவை பற்றி நமது பகுத்தறிவு கொண்டு எவ்வளவு அளவுக்குத் தான் ஆராய்ச்சி செய்கின்றோம்? உற்சாக மிகுதியினால் அவசியமற்றவைகளையும் மிக ஆடம்பரமாக நடத்துகின்றோம். அப்படிச் செய்தால்தான் மனமே மகிழ்ச்சியடையமுற்படுகின்றது. மேலும் மகிழ்ச்சி அடைந்ததாகவும் பாவிக்கின்றது.

இவ்வகை உதாரணங்களினால் நாம் ஒரு பெரிய உண்மையை நிலைநாட்டிவிடலாம். அதாவது நாம் செய்கின்ற காரியங்களில் முக்கால்பங்குவரை, கிட்டத்தட்ட, நம்மை அறியாமலே ஏதோ உள்ளத்தில் நிகழ்கின்ற நெகிழ்ச்சியால் செய்யும் காரியங்களே ஆகும். சண்டையில் ஈடுபடுகின்ற யுத்தவீரன் வெறுமனே வாளையெடுத்து வீசவேண்டியதுதானே? ஏன் ஆ, ஓ, என்று ஆரவாரம் செய்யவேண்டும்? சுதந்திரம் கௌரவம் என்ற விஷயங்களுக்கெல்லாம் தெய்வ வடிவு கற்பித்துக்கொண்டு ஏன் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும்? கோயிலுக்குச் செல்கின்ற பக்தன் அங்கு உறைகின்ற வடிவத்தை வணங்குவதைத் தவிர ஏன் அலங்காரமாக அங்கே

காணப்படுகின்ற புறக்காட்சிகளை யெல்லாம் வர்ணிக்க வேண்டும்? உணர்ச்சிப் பெருக்கினாலேதான். எவ்வித மனச்சலனமும் அற்றமுறையில் ஒன்றைப் பார்ப்பதற்கும் உணர்ச்சித் தீயில் ஆழ்ந்துகொண்டு பார்ப்பதற்கும் வித்தியாசம் உண்டு. காதலியை முத்தமிடுவது உலக இயற்கை. காதலி நின்ற இடத்தையும் அவளைக் காணாத போது முத்தமிடுகிறதென்றால், உணர்ச்சிப் பெருக்கு தானே அதற்குக் காரணமாகும். செயயலாமா, செய்யக் கூடாதா, செய்தால் வரும் லாபமென்ன, செய்யாததினால் வருகிற நஷ்டமென்ன என்று விசாரணை செய்யப் படுகிறதா? இல்லை. இல்லவே இல்லை. அப்படித்தான் கவிஞனும். கவிதை வெறிமூண்டு தனது இதயச் சலனத்தை வார்த்தைகளாக மொழி பெயர்த்துக் கொண்டிருக்கும்போது, சொல்லுகின்ற ஒவ்வொரு வார்த்தையினையும், விளக்குகின்ற ஒவ்வொரு கருத்தையும் பகுத்தறிவு என்ற உரைகல்லில் இட்டு உரைத்து உரைத்து மாற்றுணர்ந்தே மொழிபெயர்க்கின்றான் என்பதில்லை. கவிஞனுக்கு உண்டான வெறி, அதாவது இயற்கையாக உண்டான, (Recklessness) வந்தது வருகிறது என்ற துணிவோடுதான், கவிதைகளைக் கொட்டுகின்றான். கட்டுலனாகாத கவிதைச் சிறகுதறி (Viewless wings of Poesy) ராஜாளி போன்று வட்ட மிட்டுப் பறந்து வான் முகட்டை எல்லாம் தொட்டுத் தொட்டு விளையாடுகின்றான். உரை கல்லில் இட்டுப் பார்க்க அவனுக்குப் பொறுமை கிடையாது.

திருமணவீட்டில் ஆர்வத்தோடு பந்தல் அலங்காரம் செய்கின்றமாதிரி, வீரனோ, பக்தனோ, காதலனோ ஆர்வத்தைக் கொட்டுகின்ற மாதிரி, சொல்லுகின்றவை களை ஏன் எதற்கு என்று விசாரியாமலே அலங்காரமாகச் சொல்கின்றான். அவன் இதயம் அவனைக் கேளாமலே அலங்காரப்பணியில் முனைந்து விடுகின்றது. அது மேதையின் இயற்கை.

இனி கவிதையில் நாட்டம் கொள்வது பற்றிச் சில உண்மைகளை ஆராய்வோம். இயற்கையானது நம்மிடத்தில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றது. கண்ணால் காண முடியாத ஒரு உலகம் இருக்கின்றது என்பதை நாம்

மனத்தில் இருத்திக் கொள்ளவேண்டுமென்று அது ஆசைப்படுகின்றது. அதற்காக வேண்டி மனத்திற்கே அவ்விதமான ஒரு உலகத்தை அவாவும்படியான பண்பை உணர்த்திக்கொண்டிருக்கின்றது. இப் புனிதக் கைங்கர்யம் செவ்வனே நடைபெறவேண்டுமென்று கருதி, சில கர்த்தாக்களை நியமித்து, அக் கர்த்தாக்களின் மூலம் நமக்குச் சில இன்னல்களை விளைவித்துக் கொண்டிருக்கின்றது. இன்னல்களில் சிக்குண்டு இடர்ப்படும் போதெல்லாம் "ஐயோ, ஞானரதம் வந்துவிடாதா, ஏறிச்சென்று இன்ப உலகத்தை எல்லாங் கண்டு களிக்க மாட்டோமா, இந்த உலகத் துன்பத்தின் தீக்கரங்கள் எட்டாத இன்ப எல்லைக்குப் போகமாட்டோமா" என்றெல்லாம் நம்மை ஏங்கும்படி செய்கின்றது. கண்ட இன்பம் கோடி என்றால் காணாத இன்பம் கோடானு கோடி என்று எண்ணச் செய்கின்றது. குட்டிச்சுவரில் படுத்திருந்தாலும் மச்சு மாளிகையைப் பற்றிக் கனாக் காணச் செய்கின்றது. குடிக்கிறது கூழாக இருந்தாலும் கூட கொப்புளிக்கப் பன்னீரை நாடும்படி செய்கின்றது. இப்படியாக மனத்திற்கே எப்போதும் கண்ட நிலையி லிருந்து காணாத நிலையை அவாவும்படியான பண்பைக் கொடுக்கின்றது.

காணாத நிலையையெல்லாம் அவாவினால் அதை எப்படிக் காண்பது? கவிதைதான் அதற்குத் துணை செய்கின்றது. சிங்கமும் வெங்கரடியும் ஓரிடத்திலிருந்து விளையாடவேண்டும். மானும் புலியும் மருவித் திளைக்க வேண்டும். பாம்பும் மயிலும் ஒருசேரப் பயின்று திரிய வேண்டும். நிஜ உலகிலே இக் காட்சிகளைக் காண முடியாது. கற்பனை உலகில்தான் காணமுடியும். அதற்குக் கவிஞனுடைய துணை வேண்டியதுதான்.

" சிங்கமும் வெங்கரடியுடன் விளையாடும் ஒருபால்
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடும்
அங்கொருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்
விட அரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்"

என்கிறார் குமரகுருபரர்.

தேனருவியைப் பார்க்கின்றோம். அதன் திரைகள் வானின் வழி ஒழுகுகின்ற வண்ணக் காட்சியையும் பார்க்கின்றோம். பார்க்கும்வரை பெரிதாக இருக்கும். பார்த்தஉடனேயே "அடடா இன்னும் உயரத்திலிருந்து விழுந்தால் எத்தனை அழகாக இருக்கும்" என்று எண்ணுகிறோம். கவிதை அந்த அவாவைத் தீர்த்து வைக்கின்றது.

"தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் தேர்க்காலும் பரிக்காலும் வழுகும்
(சூரியனுடைய தேர்க்காலும் குதிரைக்காலும் வழுக்குமாம்)

மற்றும் மொட்டை உண்மையைவிட ஓரளவாவது கற்பனை கலந்த உண்மை மனதை நன்றாகப்பற்றி விடுகின்றது. அது தாங்கிச் செல்லும் பொருளெல்லாம் மனத்தகத்தே கொடியாகப் படர்ந்து நறுமணம் செறிந்த பூங் கொத்துகளைத் தோற்றுவித்து விடுகின்றது.

பொதிகைமலை 2700 அடி உயரம் உடையது. அங்கே தென்றல் காற்று வீசும், மேகங்கள் சஞ்சரிக்கும் என்று சொல்வதைவிட,

"திங்கள் முடி சூடும்மலை, தென்றல் விளையாடும் மலை,
தங்குபுயல் சூழும்மலை, தமிழ் முனிவன் வாழும் மலை"

என்று சொல்வது எவ்வளவு ரம்மியமாக இருக்கின்றது! சூரியன் உதயமாகின்றான். எங்கும் பொன்மயமான கிரணங்களைப் பரப்பி உலகம் அனைத்தையுமே சௌந்தர்ய தேவதை நின்று களிநடம் புரியும் ஆடரங்கமாக மாற்றுகின்றான். இந்தத் தெய்வீகக் காட்சியை மஹான் கம்பர் வர்ணிக்கின்றார். எதார்த்தத்தைச் சொல்கிறதானால், சூரியன் உதயமாயிற்று, இயற்கையெல்லாம் பார்ப்பதற்கு நன்றாக இருந்தது என்று சொல்லுவதே போதுமானது. கவிஞர் கம்பர் சிறந்த கற்பனையைக் கலந்ததோடு அல்லாமல் தமது நம்பிக்கையினுடைய மொழி பெயர்ப்பாகவும் அக்காட்சியை மதிக்கின்றார்.

சிவனுடைய நடனத்தில் கம்பருக்கு எல்லையற்ற நம்பிக்கை. சூரியன் பொன்மயமான கிரணங்களைப் பரப்பி வானரங்கில் வருவது நடனமாடுகின்ற காட்சியாகவே

காணப்படுகின்றது. கிரணங்கள் விரிந்து செல்லுவது சிவபெருமான் நடனமாடும்பொழுது அவனுடைய பொன்னிறசசடை விரிந்தாற்போன்று தோன்றுகிறது. இந்த அரிய காட்சியைப் பாராட்டி வேதங்கள் பல்லாண்டு இசைக்கின்றன. வேதியர்களும் முனிவர்களும் பல்லாண்டிசைக்கின்றனர். கின்னரர்கள் இசை முழக்குகின்றனர். உலகம் துதி முழக்கம் செய்கின்றது. கடலோ நடனத்துக்கு ஏற்றவாறு தாளங்கொட்டி ஆர்ப்பரிக்கின்றது. இவ்வாறுகக் கம்பர் வர்ணிக்கின்றார்.

( — தங்யாசி அல்லது பூபாளம் — )

"எண்ணரிய மறையினெடும் கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரம் குவிப்ப வேலை என்னும்
மண்ணும் அணி முழுவதிர வானரங்கில்
நடம்புரிவான் இரவியான
கண்ணுதல் வானவன் கனகச்சடை
விரிந்தால் எனவிரிந்த கதிர்களெல்லாம்."

இன்னும் ஒரு மாலை வர்ணனை. சிறந்த கற்பனைக் களஞ்சியமாக விளங்குகின்றது அது. கவிஞர் பாரதியார் தந்த பாக்யம்.

அர்ஜுனன் மொய்குழலாளான திரௌபதியைக் கூட்டிக்கொண்டு ஒரு மேட்டு நிலத்திற்குச்சென்று அங்கு சூரிய அஸ்தமனக் காட்சியை அவளுக்குக் காட்டி மகிழ்கின்றான். மகிழ்விக்கவும் செய்கின்றான். அதில் பொதிந்து கிடக்கிற கற்பனை இனிதான கற்பனை.

"பரிதிக் கோளம் அடிவானத்தின்கண் அளப்பரிய விரைவினெடு சுழலுகின்றது. இடிவானத்திலுள்ள பத்துக் கோடி மின்னல் கூட்டங்களை ஒருசேரக் கூட்டி, உருக்கி, ஒரு பந்தாகத் திரட்டி, காளிதேவி அப்பந்தைக் கொண்டு வானரங்கில் அம்மனை ஆடுகின்றாள். மொய்குழலே, காளிதேவியின் ஆற்றலைப்பார்" என்கின்றான் அர்ஜுனன். இங்கு பாரதியார் மிகச்சிறந்த கற்பனையை அழகிய சொற்களால் உருவாக்குவதோடு உலகத்தில்

சகல தோற்றமும் காளிதேவியின் அருளாலேதான் என்ற தமது நம்பிக்கையையும் மொழிபெயர்த்துத் தருகின்றார்.

"அடிவானத்தே அங்கு பரிதிக்கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்;
இடிவானத்து ஒளி மின்னல் பத்துக்கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கிவார்த்து
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே,
மொய் குழலாய், சுற்றுவதன் மொய்ம்பு காணாய்"

இப்படியாக வருகின்ற கற்பனை அலங்காரங்களையெல்லாம் பொய்யென்று துணிய நமது மனம் ஒருப்படுகின்றதா? துளிகூட இல்லை. அற்புதம், ஆனந்தம் என்று பாராட்டும எக்கவிப்பின் கொள்கலமாகவே மனம் மாறிவிடுகின்றது. வெறும் கல்லுக்கும் அழகான சிற்பசம்பத்து வாய்க்கப்பெற்ற அதே கல்லுக்கும் உண்டான வித்யாசந்தான், வறண்ட, ஒருவிதமான கற்பனையும் படியாத உண்மைக்கும் கற்பனை கலந்த அதே உண்மைக்கும்.

தண்ணீரே கிடையாத வறண்ட காடு என்று சொல்வதைவிட, அக்காட்டிலே செல்கின்றவன் தண்ணீர் கிடையாது மனம் அழுங்கிக் கண்ணீர்விட, அக்கண்ணீரே அவனுடைய நாவை நனைத்து அவனுடைய தகையை அடக்கும் அத்தகைய கொடிய காடு என்று சொல்லும்போது காட்டின் தீத்தன்மை தெளிவாக விளங்குகின்றது. மனதில் அழுத்தமாகப் பதிகின்றது. இதயச் சலனத்தையே கூட்டிவைத்து விடுகின்றது.

"உண்ணீர் பெறுக் தடுமாற்(று) அருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு"

இப்படிச் சொல்வது நமது நெஞ்சத்தை அள்ளவில்லையா?

காதலியை விட்டு ஆற்ற முடியாது பிரிந்த ஒருவன் அவளுடைய உருவத்தை எழுதிப்பார்த்தாவது மனம் ஆறலாம் என்று எண்ணி எழுதுகின்றான். கிருஷ்ண பரமாத்மாவைச் சுற்றி வட்டமிடும் கோபிகா ரமணிகள் போன்று காதலியைச் சுற்றி நீங்காது வட்டமிட்டுப் பல்லாண்டிசைக்கும் எண்ணத் தொகுதிகளெல்லாம்

அவன் மனத்தை ஆட்டி அலேக்கின்றன. பேராதிக்கம் செலுத்துகின்றன. ஆகவே கண்ணீர் பொங்கி இரு கண் மலர்களேயும் நிறைத்து விடுகின்றது. "பாவி விதியே, அங்கேதான் அவளோடு கூடாதிருக்கும்படி சதி செய்தாய். அவளை விட்டுப் பிரிந்திருக்கும்போது அவள் படத்தை எழுதியாவது ஆறுதல் அடையலாம் என்ருல், இங்கேயும் **கண்ணீராக** உருவெடுத்து என் கண்ணை மறைக்கின்ருயே" என்று கூறிப் புலம்புகின்ருன். இந்தப் புலப்பம் கற்பனை ஆனுலும் நெஞ்சை அள்ள வில்லேயா?

பொருள் தேடும் பொருட்டு ஓர் தலேவன் பாலே வழியே செல்கின்ருன். அவனுடைய பிரிவை ஆற்ருது தலேவி துடிக்கின்ருள். தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகின்ருள். "தலேவியே, நீ வருந்தாதே. நீ முன் ஜன்மத்தில் செய்த புண்ணியமானது ஒரு சுனே வடிவில் தலேவர் செல்லும் பாதையில் அமர்ந்திருக்கின்றது. அதிலுள்ள சொற்ப நீரானது தனக்கும் தனது பெண் மானுக்கும் காணுது என்று எண்ணி ஆண்மானனது, ஏதோ குடிப்பது போன்று ஊச்சு ஊச்சு என்ற தொனியை மட்டிலும் எழுப்பிக் கொண்டு, குடியாது தனது அருமைப் பிணையை உண்ணச் செய்யும் காட்சியைத் தலேவர் பாராமலா போய்விடுவார்? பார்க்கத்தான் செய்வார். அவர் மனம் திரும்பவே செய்யும். வருந்தாதே" என்கிருள்.

"சுனேவாய்ச் சிறுநீரை எய்தாதென்றுன்னிப்
பிணேமான் பெரிது (உ)ண்ணவேண்டிக்—கலேமான் தன்
கள்ளத்தால் ஊச்சும் சுரம்என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி."

இதில் மிளிர்கின்ற **பாவம்** கற்பனே கலந்த **பாவமா**ருலும் உள்ளத்தை உருக்கவில்லேயா?

காதலில் ஈடுபட்ட ஒரு காதல் வெறியனுக்கு அவனுடைய காதலியின் மீதுள்ள ஆசை கங்கு கரையற்றிருந்தது என்று சொல்லுகின்ற அதே உண்மையானது கற்பனேயோடு கலக்கப்பெற்றதும் அசாதாரணமான ஒரு **பாவ**மாகத் தோன்றிவிடுகின்றது.

" ஆடுங் கடைமணி ஐவேல்* அசதி அணிவரைமேல்;
நீடுங் கயல்-கண் ணியார் தந்த ஆசை நிகழ்த்தரிதால்
கோடும் குளமும் குளத்தருகே நிற்கின்ற குன்றுகளும்
காடும் செடியும் அவளாகத் தோன்றும் என்
கண்களுக்கே "

* ( அசதி என்பவனுடைய அழகிய மலையில். )

உம், உம், உம் என்று அழுந்திச் செல்கின்ற போக்கு பாவத்தினுடைய அழுத்தத்தை எவ்வளவோ துடியாக எடுத்துக் காட்டுகின்றது. அந்த பாவப் போக்கில் நம்மைக் கேளாமலே நமது மனம் ஈடுபட்டுவிடுகின்றதல்லவா?

பட்டவர்த்தனமான உண்மையை மதித்து, அழகாக அமைத்தாலும், கற்பனை கற்பனைதானே என்று சொல்லி அதன்மீது கல்லைத்தூக்கிப் போடுவோர்க்குச் சொல்ல விரும்புவது கவிதையினுடைய குறிக்கோள் வெறும் பட்டவர்த்தனமான உண்மையைக் கூறுதல் என்பதோ, ஞான விளக்கத்தை ஊட்டவேண்டும் என்பதோ இல்லை என்பதாகும். அழகை வடித்துக்காட்டுவதே அதன் தொழில். அதுவே அதன் லக்ஷியம். கவிதை என்பது உண்மையும் ஆகாது. ஞானமும் ஆகாது. ஆனால் உண்மைக்கு அழகைக் கொடுப்பது. ஞானத்திற்கு ஒளியைக் கொடுப்பது. இதைத் தெரிந்துகொள்வோமாக.

1. The object of Poetry is not truth or edification but beauty.
2. Song is not truth nor wisdom
   But the rose upon Truth's lips
   And the light in wisdom's eyes.

கவிதை என்பது விஞ்ஞான ஆராய்ச்சி போன்ற விஷயத்தொகுதியில்லை. தர்க்கத்தின் பீடமும் இல்லை. கவிஞனுடைய மேதையின் வெளியீடே கவிதை என்பது. உணர்ச்சியே அதன் உயிர். அதன் ஜீவாதாரம். அழகே அது புனையும் ஆடை. ஒவ்வொரு உத்தமக் கவிஞனுக்கும், ஏதோ கருவிலே அமைந்த திருவாக, அவனைச் சூழ்ந்திருக்கும் பிரபஞ்சத்தைப் பற்றிய ஒரு உணர்வு உருவாகின்றது. இந்தப் 'பிரபஞ்ச உணர்வானது' சில பல அம்சங்களில் விசேஷ உணர்ச்சி ஈடுபாடு கொண்ட

தாக இருக்கின்றது. சிலருக்கு இயற்கை வனப்புகளை வர்ணிப்பதில் விசேஷ ஈடுபாடு. சிலருக்கு மனித வாழ்க்கையை விஸ்தரிப்பதில் விசேஷ ஈடுபாடு. சிலருக்கு இந்தப் பிரபஞ்சத்தையெல்லாம் உள்ளும் புறமுமாக ஊடுருவிச் சென்று எங்கும் படிந்து சர்வ ஆதிக்கம் செலுத்துகின்ற தத்துவங்களில் விசேஷ ஈடுபாடு. இவ்வாறாக ஈடுபாடு பலவகைப்படும். பல துறைப்படும். இப் பலதிறப்பட்ட ஈடு பாடுகளே கவிதையைத் தோற்றுவிக்கும் சாதனங்களாகின்றன. கவிஞனுடைய இதயக் கொடியிலிருந்து தோன்றுகின்ற வண்ண நறுமலரே கவிதை. கவிஞன் பேசுவதெல்லாம் அவனுக்குக் கருவிலே வாய்த்த திருவாக அமைந்துள்ள ஞானப் பிரகாசத்தினாலேதான். அதை அவனும் நம்புகின்றான். நாமும் அவனுடைய பாடல்களைப் படிக்கும்போது நம்புகின்றோம்.

> "மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
> உன்னையறிந் தோதமிழை ஓதினேன்—என்னைப்
> பரிந்தேற்றுக் கொள்ளாப் பதியுண்டோ உண்டோ
> விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்து." *

என்று கம்பர் வாக்காக வழங்கிவரும் பாட்டில் தாம் சிறந்த கவித்துவம் படைத்தவர் என்பதைக் கம்பர் உணர்ந்தே பேசுகின்றார். அது நன்றாகத் தெரிகின்றது. கவிஞர்களுக்கு அந்த உண்மையில் நம்பிக்கை உண்டு.

> "ஸ்ரீ எட்டயபுரம் மகாராஜா ராஜேந்த்ர ஸ்ரீ வெங்க டேசுரெட்டப்பபூபதி அவர்கள் சமுகத்துக்கு **கவிராஜ** ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி எழுதும் ஓலைத்தூக்கு"

என்ற தலைப்பின் கீழ் பாரதியார் எழுதுகின்றபாடலிலும் இந்தப் பண்பைப் பார்க்கலாம்.

> "புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
> தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
> கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
> வசைஎன்னால் கழிந்ததன்றே!

* டி. கே. சி. அவர்கள் பாடம்.

"சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது,
சொல்புதிது, ஜோதிமிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகா கவிதை"

என்றும்,

"வியப்புமிகும் * புத்திசையில் வியத்தகும்என்
கவிதையினை"

என்றும் கூறுவதன்மூலம் தங்கள் அகத்தே அமைந்த ஞானப் பிரகாசத்தாலேயே தாங்கள் பாடுகின்றார்கள் என்பதைக் கவிஞர்கள் உணர்ந்துள்ளார்கள். இந்த உண்மை மிக நன்றாகத் தெரிகின்றது. அதனை நம்புகின்றோம்; நம்பவும் வேண்டும்.

"துடிக்குதென் உதடும் நாவும்
சொல்லுசொல் லென்றே வாயில்
இடிக்குது குறளி அம்மே, இனிக்குறி
சொல்லக் கேளே".

(குற்றாலக் குறவஞ்சியில் குறிசொல்லும் குறத்தியின் கூற்று)

என்ற அடிகளின்மூலம் தெய்வவெறியின் பயனைக் குறத்தியின் அனுபவம் எப்படி வெளியாகின்றதோ அம்மாதிரியே கவிஞனது அனுபவமும். தெய்வ கடாக்ஷத்தால் வரப்பிரசாதமாகப் பெற்ற அவனுடைய பிரபஞ்ச உணர்வானது சொல்லு சொல்லென்று இடித்து அவனைப் பேசும்படி தூண்டுகின்றது. அவன் பேசுகின்ற பாஷை ஒரு தனிப்பட்ட பாஷை. சிறந்த வண்ணப்பாடு தழுவிய பாஷை. ஏதோ இந்தப் பிரபஞ்ச இயக்கத்தின் மர்மத்தையே தனது பாஷையின்மூலம் கவிஞன் தெரிவிக்க முற்படுவதாகத் தோன்றும். பாட்டின் நலத்தை உணர செவியானது ஒரு பிரதான அங்கமாக இருப்பதால், கவிஞன் தனது செவியின்மூலமே சராசரங்களின் பொருளையும் அவைகளுக்குள் உண்டான தொடர்பையும் உணர முற்படுவதாகத் தோன்றும். நிஜ வாழ்க்கையில் பயிலப்பட்டுவருகின்ற பாஷையைவிட

* புதிய இசை அல்லது சந்தம்.

எவ்வளவோ அழகான பாஷை கவிதையில் வழங்கும் பாஷை. கற்பனை செறிந்திருந்தாலுங்கூட எப்படி நமது மனதைக் கவர்ந்துவிடுகின்றது என்ற மர்மம் நமக்குப் புரியவில்லை. கவிதையானது பட்டவர்த்தனமான உண்மையாகாது என்று வைத்துக்கொண்டாலும், புனித மான அழகு அதனுள் உறைந்து கிடக்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது.

வெறும் பட்டவர்த்தனமான உண்மைக்காகவா நாம் கவிதையைப் படிக்கின்றோம்? இல்லை. அது வழங்கு கின்ற மட்டற்ற இன்பத்திற்காக வேண்டியல்லவா படிக் கின்றோம். பல்சுவையும் படிந்த அன்னத்தை வழங்கும் அமுத சுரபி யல்லவா கவிதை. கவிதையில் நாட்டம் கொள்ளப் பழகுகின்றவர்கள் ஆரம்பத்தில் வெறும் தந்தனக் கூத்துகளையும் ரஞ்சகப் பாட்டுகளையும் படித்தபிறகுதான் கவிதையில் நாட்டம் கொள்ளப் பழக வேண்டும் என்பது கிடையாது. உயர்ந்த கவிதை களையே படித்துப் பழகவேண்டும். கவிதைச் சுவையினை யாருமே நினைத்த மாத்திரத்தில் பெற்றுவிட முடியாது. கொட்டாவி மூலம் கம்பன் காளிதாஸன் போன்ற மஹான் களுடைய மேதையை அளந்துவிடமுடியாது. இனிய கவி தைகளெல்லாம் கவிஞனுடைய இதயமலரில் படிந்திருக் கும் பனித்துளிகளாகும். அவனுடைய மேதாவிலாசத் தின் பிரகாசத்திற்கு ஏற்ப அப்பனித் துளிகள் ஜ்வலிக் கும். கவிதைகளிலே ஈடுபடும்பொழுது கைகால்களை அசைத்தல், தலையாட்டுதல், பாவபூர்வமான முறையில் முகத் தோற்றத்தை அவ்வப்போது திரித்தல் ஆகிய செயல்களை நம்மை அறியாமலே நாம் செய்ய முற்படு வோம். அப்படிச் செய்யும்போது "அடடா, அடுத்த வர்கள் பார்த்தால் நகைப்பார்கள்" என்பது போன்ற சுயஉணர்வு தோன்றும். (Self-consciousness) அப்படித் தோன்றும் சுயஉணர்வை அறவே துடைத்துவிட வேண்டும். புனிதமான கவிதாலயத்திற்குள் செல்லும் போது ஆலயத்தின் முன்னுள்ள பலிபீடத்தில் இந்த 'சுயஉணர்வை'ப் பலியிட்டுவிடவேண்டும்.

மேலும் கவிதையை அனுபவிக்கும்பொழுது ஒன்றை ஒன்று ஒப்பிட்டு, மாற்று உரைத்து, எடைகட்டி, சீர்

தூக்கிப் பார்க்கக்கூடாது. சிலர் கவிதையைச் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது அதனுடைய ஓசை நயத்திற்கும் இசை ஆற்றலுக்கும் பிரதானமான ஸ்தானத்தைக் கொடுக்கின்றார்கள். ஓசை வளமும் இசை நலமும் உண்மையிலேயே முக்கியமானவைகள் என்றாலும் இவைகளின் அருமைக்காக வேண்டி நாம் பொருளைப் புறக்கணித்துவிடக்கூடாது. சிலருக்கு வார்த்தைகளில் இருக்கிற மோகம் மிருக-மோகமாகவேதான் இருக்கும். சிலருக்கு வெறும் ஒலியிலேயே அளவுகடந்த மோகமிருக்கும். மருந்து மயக்கத்திலோ மது மயக்கத்திலோ அழுந்தி மரிக்கின்றது போன்று ஓசை இன்பத்திலேயே மயங்கி மரித்தலும் ஒண்ணும் என்று கூறுகின்றார் கெராட் (Garrod) என்ற அறிஞர். (I could fancy that a man might as easily die a victim to the seduction of vowels as a victim to drink or drugs) அத்தகைய அசுணமா — கூட்டத்தார் இலக்கியஉலகத்தில் உண்டு. கவிதைச் சுவையானது ஒருவனை என்ன நிலைக்கெல்லாம் கொண்டு செல்லும் என்பதை உணர்த்த 'நந்திக் கலம்பகத்தின்' கதாநாயகனை நந்திபோத்தரையனது வரலாறு தக்க (ஒரு) சான்றாகும்.

" கள்ளாரும் செஞ்சொல் கலம்பகமே கொண்டு
*காயம்விட்ட
தெள்ளாறை நந்தி எனும் தொண்டைமான் "

என்று பாராட்டப்படும் சிறப்பைப் பெற்றவன் அந்த நந்தி போத்தரையன். *(உடம்பு)

அவன் கொடையில் சிறந்தவன். அவன் தம்பி அவன் மீது பொறாமைகொண்டு வசையாக ஒரு கலம்பகம் பாடினான். அக் கலம்பகத்திலுள்ள ஒரு பாடலை ஒரு தாசியைக் கொண்டு நந்தி கேட்கும்படி சொல்லவைத்து, பின்னர் அவளை ஓடிப் போகும்படி செய்துவிட்டான். பாட்டைக் கேட்ட நந்தி வசையென்றும் எண்ணாமல் பாட்டின் மீது கொண்ட மோகத்தால் அத்தனை பாடல்களையும் கேட்க ஆசைகொண்டான். தாசியானவள் வீணையில் பாடுவதைக் கேட்க வேண்டி மயானம்வரை பந்தலிட்டு மயானத்தில் விறகையும் அடுக்கி அந்தத்

தாசியைப் பாடும்படி தூண்டினன். அவளும் பாடினள். ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் ஒவ்வொரு பந்தல் எரிந்தது. இறுதியில் மயானத்தில் அடுக்கிய விறகின் மீது உட்கார்ந்துகொண்டு அவளைப் பாடச் செய்தான். அப்போது அவள் பாடுகின்றாள்.

"வானுறுமதியை அடைந்ததுன் வதனம்
வையகம் அடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்த உன்கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானும் என் கவியும் எவ்விடம் புகுவேம்
எந்தையே நந்திநாயகனே."

இப்பாடலைப் பாடியதும் விறகு தீப்பற்றி எரிகின்றது. நந்தி உயிர் துறக்கின்றான். கதை உண்மையோ பொய்யோ, அதைப்பற்றி அக்கறை இல்லை. சுவை ஈடுபாடு எத்தனை அளவில் ஒருவனுடைய உள்ளத்தை ஆட்டுவிக்கும் என்பதை விளக்க எழுந்த ஒரு திருஷ்டாந்தமாக இதைப் பாவித்துக்கொள்ளலாம். கற்பனையான திருஷ்டாந்தம் என்றாலும் குற்றமில்லை. என்ன இருந்தாலும் அவனுக்கிருந்த மோகமல்லவா இவ்வாறு உயிரைத் தியாகம் செய்யும்படி தூண்டுகின்றது. இறப்பது உறுதி என்று அறிந்தும், உயிரை விலையாகக் கொடுத்தாவது கவிதையை அனுபவிக்கவேண்டும் என்றல்லவா அவன் துணிந்துவிட்டான். இப்படிக் கவிதையினுடைய ஓசை இன்பத்திலும் பொருள் இன்பத்திலும் மயங்குவார் உண்டு. அப்படி மயங்கவும் வேண்டும்.

ஓசையின் மந்திரசக்திபற்றி (incantation of words) உலகம் சுற்றிய தமிழரான * ஸ்ரீமான் A. K. செட்டியார் ஒரு செய்தியைக் குறிப்பிட்டார். ஜப்பான் தேசத்திற்கு அவர் சென்றிருந்தபோது, ஓர் விடுதியிலுள்ள சிலர் போர்ப்பாட்டு ஒன்றைப் பாடி மகிழ்ந்துகொண்டிருந்தார்களாம். பின்னர் திரு செட்டியார் அவர்களைப் பார்த்து,

---

* திருநெல்வேலியில் நிகழ்த்திய பிரசங்கம்.

"நீங்களும் இப்படி ஒரு பாடலைப் பாடுங்கள்" என்றார்களாம். ஸ்ரீமான் செட்டியார் திகைத்துவிட்டு, அப்பால் "அச்சமில்லை அச்சமில்லை" என்று தொடங்கும் பாடலைப் பாடவும், அவர்கள் வெறும் ஓசையிலேயே அதிசயமுற்று, அப்படியே தங்கள் மொழியில் எழுதிக் கொண்டார்களாம். கேவலம் பொருளே தெரியாவிட்டாலுங்கூட ஓசை அவ்வளவு தூரம் மக்களை வசீகரப்படுத்தி விடுகின்றது. பொருளைக் கவனித்தாலும் சரி அல்லாது போனாலும் சரி, வெறும் ஓசைக்காகமட்டிலும் கீழ்வரும் உதாரணங்களைப் பார்ப்போம்.

இராமன் சீதையுடனும் இலக்ஷ்மணனுடனும் காட்டினுள்ளே செல்கின்ற காட்சியை மகான் கம்பர் வர்ணிக்கின்றதாக அமைந்துள்ளவை பின் வரும் பாடல்கள்.

[தன்ன - தன, தன்ன - தன, தன்ன - தன, தன்ன]

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியில் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும்போன
மய்யோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ [னான்
அய்யோஇவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்

"மாகந்தமும் மகரந்தமும் அளகந்தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரும் இதழான்
மேகந்தனி வருகின்றது மின்னோடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா"

இன்னொரு இடத்தில் நாகபாசத்தால் கட்டுண்டு மயங்கிக் கிடக்கின்ற தன் தம்பியையும் ஏனையோரையும் இராமன் பார்க்கின்றான். ஒரே இருளாக இருக்கின்றது. "இதோ திரிலோகத்தையும் அழித்து விடுகின்றேன்" என்று துணிந்துவிடுகின்றான். "ஆஹா, வேலியே பயிரை மேயத் துணிந்துவிட்டதே! இனி க்ஷணநேரமும் தாமதிக்கலாகாது" என்ற ஆத்திரம் உந்த, வாயுவேக மனோவேகமாகப் பறந்து வருகின்றான் கருடன். அவனுடைய இறக்கைகளை விசையாக வீசி அடிப்பதால் கடலானது கரைக்குள்ளும் கரையானது கடலுக்குள்ளும் மாறிப் புகும்படியான அளவில் அத்தனை பெரிய சூறுவளி கிளம்புகின்றது.

"எத்தனை காவத தூரமானாலும் கருடன் பார்க்கக் கூடியவன். இராமனுடைய மனத்தில் துக்கம் பெருகி அவன் அயர்வதைக் கண்டு கண்ணீர் பெருக்கி மிக வேக மாக வருகின்றான். வரும் வேகத்தால் கடலிலுள்ள அலை கள் கொந்தளிக்கின்றன. இருள் ஓட்டம் பிடிக்கின்றது. இறக்கைகள் வேத ஒலியை எழுப்புவதால் உலக பாவங் கள் ஒழிகின்றன. கருடன் தோன்றுவதால் நாகத்தின் பிணிப்பு விடுகின்றது.

இருளை யெல்லாம் சுருட்டி விடுகின்றது அவன் வருகையால் எழும் ஒளிவெள்ளம். வெயிலையும் நிலவை யும் அகன்ற எட்டுத்திக்கிலும் நிலைபெற நாட்டியது போன்று காணப்படுகிறது. மேருமலையில் தோன்றும் சூரியனினும் மும்மடங்கு பொலிகின்றது அவனுடைய கிரீடம்." இதுவே கீழ்வரும் இரண்டு பாடல்களின் பொருள்.

இனி அதிகப்படியான அளவில் பொருளைக் கவனி யாது சந்தலாவண்யத்தையும் ஓசை உல்லாசத்தையும் அனுபவிப்போம்.

[குறிப்பு:— நன்றாக இசைத்துப் பாடவும்]

தானன்ன-தான, தானன்ன-தான, தானன்ன-தான, தனா

"காதங்கள் கோடிகடை சென்றுகாணும் நயனங்கள் வாரி கலுழ
நேதங்கள்கூர அயாகின்றவள்ளல திருமேனிகண்டு கிளர்வான்
சீதங்கொள் வேலை அலைசிந்தஞாலம் இருள்சிந்த வந்த சிறகால்
வேதங்கள் பாட உலகங்கள் யாவும் வினைசிந்த நாகம்மெலிய."

"அலைலைச்சுருட்டி வெயிலைப்பரப்பி அகலாசை முற்றும் அழியா
விலைலைச் செலுத்தி நிலவைத் திரட்டி விரிகின்ற ஜோதிமிளிர
எல்லைக் குயிற்றி எரிகின்ற மௌலி இடைநின்றமேரு எனும் அத்
தொல்லைப்பொருப்பின்மிசையேவிளங்குசுடரோனினமும்மைசுடர"

இம்மாதிரிப் பாடல்களில் பயின்றுவரும் சந்த விளையாட் டுக்களையும் ஓசை இன்பங்களையும் கவனித்தால் எத்தனை தடவை வேண்டுமானாலும் வாய் சலியாது, செவி சலியாது மனமும் சலியாது சொல்லிக்கொண்டே இருக்கலாம் போன்று தோன்றுகின்றது. அத்தனை அருமையாக இருக்கின்றது. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே

இம்மானிலத்தே.'' இல்லையா? இன்னதுதான், இப்படித் தான் என்று எடுத்துச் சொல்ல முடியாத ஆனந்தம் பிறக்கின்றது.

இன்னும் கவிதையை அனுபவிப்பது பற்றிச் சில உண்மைகளை ஆராய்வோம். நம்மில் பெரும்பாலோர் பாடல்களை வாய்விட்டுப் படிக்காமல் மனதுக்குள்ளேயே படிக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். ஒலியிலிருந்து பொருளை உணர்ந்துகொள்வதை விட்டு, பொருளிலிருந்து ஒலியை உணர்வதாக இருக்கின்றது அந்த முறை. உதடுகள் அசைகிறதில்லை. காதுகளுக்கும் எவ்வித ஜோலியும் இல்லை. மனதுக்கு விஷயத்தைக் கொண்டு செல்வதெல்லாம் கண்தான். கண்ணே தொழில் செய்தாலுங்கூட கவிதையின் நிறை குறைகளை நிதானித்து விடுகின்றோம். எப்படி நம்மால் நிதானிக்க முடிகின்றது என்பதைப் பார்ப்போம். மனக்கண் மனக்கண் என்று அடிக்கடி யாவரும் சொல்லக் கேட்கின்றோம். **மனக்காது** (Mind's ear) என்று சொல்லக் கேட்கின்றோமா என்றால், இல்லை. மனக்கண் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை மனக்காது என்பதும். இந்த உண்மையை ஆசிரியர் கௌராட்' என்பவர் அழுத்தமாக எடுத்துச் சொல்கின்றார். நம்மை விட சங்கீதவித்வான்களுக்கு இந்த உண்மை நன்றாகத் தெரியும். சங்கீதத்திற்கு இறுதியான புகலிடம் காது தான். ஆனால் கவிதைக்கோ மனதே இறுதியான புகலிடம். மனக்காதாலேயே கேட்கமுடிகின்றது. சிலர் இந்தக் கட்சியைவிட வாய்விட்டுப் படிக்கும் கட்சிக்கே மிகுந்த ஆதரவு கொடுக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய கட்சிக்காகவேண்டிப் பின்வரும் நியாயங்களைக் கூறுகின்றார்கள். வார்த்தைகளுக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று பொருள். மற்றொன்று ஒலி. புஸ்தகத்தில் காணப்படும் வார்த்தைகள் அரை உயிரோடுதான் காணப்படுகின்றன. நாம் ஊட்டுகின்ற ஓசையின் மூலம் எஞ்சிய அரை உயிரும் பூர்த்தியாகின்றது என்கின்றனர். (Words are but half alive when they appear on printed pages) ஆகவே ஒலி ஊட்டித்தான் படிக்கவேண்டும் என்கிறார்கள். ஆனாலும் இரு முறைகளின் மூலமும்

பலன் கிடைக்க வழியிருப்பதால் எதைக்கையாண்டாலும் சரியே.

கவிதையில் காணப்படும் வார்த்தைகளுக்கு வெறும் பதபொருள் தான் உண்டு என்பதில்லை. தொனிப் பொருளும் உண்டு. தொனிப்பொருளிலும் நானாவித ரகங்கள் உண்டு. இனம் இனத்தோடு என்பது போன்று, வெள்ளாட்டுக் கூட்டம் திரண்டமாதிரி, ஒரு பொருளைச் சுற்றி அனேக தொனிப் பொருள்களும் துணைப்பொருள் களும் தோன்றிவிடும். தென்றல் என்று வந்தால், தெற்கேயிருந்து வீசுகின்ற காற்று என்று மட்டிலும் பொருள்படாது. பொதிகைமலையைக் குறிக்கும். தமிழ் மொழியைக் குறிக்கும். தமிழ்நாட்டைக் குறிக்கும். தமிழின் மாட்சிகள் அனைத்தையும் குறித்துவிடும். இப்படியான ஆற்றல் வார்த்தைகளுக்கு உண்டு. அதனுலேதான் வார்த்தையானது தன்னை உபயோகிக்கின்ற கர்த்தாவை விட ஞானமுள்ளது என்னும் கருத்தொன்று வழக்கில் பயின்று வருகிறது. (**words are wiser than those who use them.**) வார்த்தைகளினுடைய மர்மங்களையும் விசித்திரப் பண்புகளையும் கவிஞர்கள் நன்ருக உணர்ந்து, என்னென்ன அருமைப்பாடுகளெல்லாம் விளங்க அவை களை உபயோகித்துவிடுகின்ருர்கள்! சில இடங்களில் ஒப்புமையான வார்த்தைகளைக்கொண்டு அற்புதமான மந்திரவேலைகளையெல்லாம் செய்துவிடுவார்கள் கவிஞர் கள். உதாரணமாக ஒன்றைப் பார்ப்போம்.

கூடல் என்பது மதுரைக்குரிய பெயர். கூடல் இழைத்தல் என்ருல், மணலைப் பரப்பி ஒற்றை விரலால் வளைத்து வளைத்து சங்கிலித் தொடர் போன்று கண்ணை மூடிக்கொண்டு வட்டமிட வேண்டும். வட்டமிடும்போது முடிகின்ற கோடு ஆரம்பக் கோட்டைத் தொட்டுவிட்டால் நினைத்த காரியம் சித்தியாகிவிடும். இப்போது ஒரு காதலி கூடல் பெருமாளுகிய பாண்டியனை எண்ணிக் கூடல் இழைக்கிருள். பாண்டியன் வருவாளு வர மாட்டாளு, அவனோடு கூடுவதற்குரிய பாக்யம் கிட்டுமா கிட்டாதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள மன மானது துடியாகத் துடிக்கின்றது. ஆனுல் தவறி

விட்டால் மனம் சஞ்சலப்படுமே என்று எண்ணி இடையில் விட்டுவிடுகிருள். இந்த பாவத்தை ஒரு சொல்லே பல தடவல் வந்து எத்தனை அழகாகப் பொருளைத் தெரிவிக்கின்றது! அத்தனை பதங்களும் வெளிப் பார்வைக்கு ஒரே ரகமான உடைகளை அணிந்தவைகளாகக் காணப்பட்டாலும் அவைகளுக்குரிய ஸ்தானங்களிலும் குறிப்புகளிலும் நல்ல வித்தியாசம் உண்டு.

"கூடல் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவனேல் கூடென்று—கூடல்
இழைப்பாள்போல் காட்டி இழையாது நிற்கும
பிழைப்பில் பிழைபாக் கறிந்து." இன்னொரு (உ-ம்)

ஒரு தலைவி வஞ்சி என்ற தனது தோழியிடம் வஞ்சி நாட்டு மன்னன் "வஞ்சியேன், வஞ்சியேன்" என்று தன்னிடம் சொல்லியும் வஞ்சித்த வரிசையை எடுத்துக் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

வஞ்சியான் என்றவன்தன் ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியான் என்றதனல் வாய்நேர்ந்தேன்—வஞ்சியே
வஞ்சியேன் வஞ்சியேன் என்றென்றுரைத்துப்பின்
வஞ்சித்தான் வஞ்சியார் கோ.

இப்பாடல்களிலெல்லாம் ஒரு சொல்லைக் கொண்டே கவிஞன் அசாதாரணமான காரியங்களைச் சாதித்து விடுகின்ருன்.

நாம் எவ்வளவுக்கெவ்வளவு உணர்ச்சியைக் கொட்டி பாடலின் சுவையை உணர முற்படுகின்ருேமோ அவ்வளவுக்கவ்வளவு பாடல் தாங்கிச் செல்கின்ற பாவமும் வார்த்தைகளின் நேர் பொருள் தொனிப் பொருளாகிய பொருள் விஸ்தாரங்களும் நம்மை, ஏதோ சொல்ல முடியாத, ஆனுலும் சொல்லிவிட வேண்டும் என்று ஆசைப்படுகின்ற, ஒரு மயக்கத்தில் அழுத்திவிடும. ஒரு கருத்து அதனேடு இணைந்த மற்ருெரு கருத்தை ஞாபக மூட்டும். இப்படி ஞாபக மூட்டுவதன் மூலம்நமது சிந்தனையானது கருத்து வெள்ளத்திலேயே மிதந்துகொண்டு

செல்லும். இதற்கிடையில் எதுகை மோனைகள் கருத்தினுக்குக் கொடுக்கின்ற அழுத்தம் வேறு. அதன் முழு வடிவத்தையும் நாம் காணவேண்டி அதன்மீது ஒளிக் கதிர்களை இந்த எதுகை மோனைகள் பரவவிடும். ஆக இப்படியான அனுபவத்தில் நமக்கே ஆச்சர்யம் உண்டாகி விடுகின்றது. இம்மாதிரி **வெறி யூட்டும் பண்பானது பாஷைக்கு உண்டா** அல்லது கவிஞனுக்குத் தானா என்று நம்மை ஆராய்ச்சி செய்யும்படி தூண்டி விடும். கவிஞன் வார்த்தைகளை உபயோகிக்கின்றானா அல்லது வார்த்தைகளே அவனை ஒரு கருவியாகக் கொண்டு விளையாடுகின்றனவா என்றெல்லாம் எண்ணும் படி தூண்டும். இம்மாதிரி பாஷை அழகில் ஈடுபடுவ தென்பது மனிதப் பிறவிக்கென்றே ஏற்பட்ட தனிப் பண்பு. மனிதன் ஒரு அற்புதமான சிருஷ்டி அல்லவா? கவிதையை அனுபவிப்பதில் எவ்வளவு அளவுக்கு மனச் சுருளை விரிக்க முடியுமோ அவ்வளவு அளவுக்கு விரித்து அனுபவிக்க முற்பட வேண்டும்.

" கண்ட கண்கள் புனல்பாய, களிப்பாய் உள்ளம் கரை அழிய,
விண்டமொழியில் நாக்குழற, விம்மி மேனி மயிர் பொடிப்ப,
பண்டை வசம்போய் பரவசமாய் "

பக்தன் எப்படி நிற்பானோ தேவாலயத்தின் முன்பு அவ்வாறே கவிதாலயத்தின் முன்பு ரஸிகன் நிற்க வேண்டும். பிறருக்கு எடுத்துச் சொல்லும்போதுகூட உபதேசி என்ற உணர்வின்றி மயிலும் குயிலும் ஆத்ம திருப்திக்காக வேண்டி ஆடிப்பாடி மகிழ்வதைப் போன்று, பாடலின் மூலம் தனக்குள்ள ஆத்ம திருப்தியை வெளியிட வேண்டும். விதிவிலக்குகளில் ஈடுபட வேண்டாம். ஒருவனுக்கு எது விஷமோ அது அடுத்தவனுக்கு அமிர்தமாகலாம். அதெல்லாம் **பாவனை**யைப் பொறுத்தது.

கவிதை என்பது ஒரு அபூர்வமான இன்பசாதனம். அதற்கென்று அமைந்த தனிமுறையில் அது இன்பத்தைச் சுரந்துகொண்டே இருக்கும். அதுவே அதனுடைய

இலக்ஷியம். அதனுடைய பிறப்பு - மர்மமும் அதுவே. அதைக் கட்டுப்படுத்த முடியாது. எத்தனை இலக்கணத்தை அதன் முன் தட்டிக்கொடுத்து தலைவிரித்தாடச் சொன்னாலும் அந்தப் பேயாட்டத்திற்கெல்லாம் அது மயங்கிவிடாது.

கவிதைக்கும் உண்டோ கபாடம்? இல்லைதான்.

ஒரு உண்மை தெரிகின்றது. அதுவும் மிக நன்றாகத் தெரிகின்றது. அது யாது என்பதைப் பார்ப்போம். இமயம் முதல் குமரிவரை "ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்" கதையெல்லாம் இன்று பாட்டி சொன்ன பழங்கதையாகப் போய்விட்டது. "சீனம், மிசிரம், யவனர் அகம்" என்ற தேசங்கள் என்ன, "சிங்களம், புட்பகம், ஜாவகம்" ஆகிய தீவுகளென்ன, அங்கெல்லாம் சென்று புலிக் கொடியும் மீன்கொடியும் பொறித்து விளங்கிய பொன்றாப் புகழனைத்தும் இன்று புல்லில் சிந்திய தவிடாகப் போய்விட்டது.

*தென்றல் அளைந்த கொடி, செந்தமிழ் மணந்த கொடி,
மன்றம் வளர்த்த கொடி, வளர்கலைகள் தந்த கொடி,
கடலைக் கடந்த கொடி, கனகமணி சேர்த்த கொடி,
வடபால் இமயமொடு வாழ்குமரி தொட்ட கொடி,
அச்சம் தொலைத்த கொடி, ஆண்மைதனை நட்ட கொடி,
துச்சம் துறந்த கொடி, தொன்மை நிறைந்த கொடி,
வீரம் விளைத்த கொடி, மெய்க்கீர்த்தி பெற்ற கொடி,
ஈரம் கலந்த கொடி எங்கள் தமிழ்க் கொடியே.

(ஆசிரியர் எழுதியது)

என்றெல்லாம் பாராட்டுதற்கு அமைந்த சரித்திர சீலம் வாய்ந்த தமிழ்க்கொடியின் பெருமையை இன்று சாற்றுவார் பலர் இல்லை. இவ்வாறு ஏறி, நிமிர்ந்து, எட்டாத நிலை கவர்ந்த எழில்களெல்லாம் மாறி, மறைந்து, வரிசை குன்றி வருகின்றன. ஆனல் ஒன்றே ஒன்று மட்டிலும் மார்க்கண்ட நலத்தோடு மன்னி வருகின்றது. அந்த

ஒன்றின் பெருமையோ எண்ணவும் அரிது, இயம்பவும் அரிது. நமது ஊனினை உருக்குகின்றது. உள்ளொளி பெருக்குகின்றது. உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிகின்றது. அது எது? அதுதான் **கவிதை**. அது அழகுடையது. எனவே ஆனந்தம் நிறைந்தது. அது ஜீவனுடையது. எனவே சிரஞ்சீவித்திறம் பெற்றது.

கொள்ளவும் இன்பம். கொடுக்கவும் இன்பம்.
பாடவும் இன்பம். பகரவும் இன்பம்.

வாடா நறுமலர். வற்றாப் பெருஞ்சுனை.
நாடாரை நாடாது. நட்டாரை நீங்காது.

கல்லிலும் இருக்கும். புல்லிலும் இருக்கும்.
காற்றிலும் இருக்கும். கனலிலும் இருக்கும்.

வாழ்க கவிதை. வாழ்க நிரந்தரம்.
வாழ்க அதன் புகழ் வாழ்த்திடும் உலகு.

நல்லது பிறக்கவும், நானிலம் சிறக்கவும்,
அல்லது நீங்கவும், அமைந்தது நிலவவும்

கவிதையைப்போல் துணைசெய்யும் சாதனம் எவும் இல்லை.

உள்ளத்தைச் சுண்டிவிடும்
உணர்வுதனைக் கிண்டிவிடும்;
கொள்ளை வளங்காட்டும்
கோபுரம்போல் நலங்காட்டும்;
காணும் கண்வழுங்கும்
கருதும் மதிவழங்கும்;
பேணும் அறம்வளர
பெரிதாம் துணைவழங்கும்.

ஆம். அதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இன்னும் சொல்வதென்றால், கவிதையானது,

இருளை ஓட்டும் இரவி
எழிலை ஊட்டும் சுரபி;
அருளை இறைக்கும் மேகம்
அகத்தை நிறைக்கும் **போகம்**;
துன்பம் கொல்லும் சுடர்வேல்
இன்பம் நல்கும் ஏது;
தோண்டத் தோண்டச் சுரக்கும்
சுவைக்கச் சுவைக்க இனிக்கும்.

அல்லாதுபோனால்,

“போதெல்லாம் பாட்டு, பொழுதெல்லாம் சங்கீதம்,
யாதுக்கும் அஞ்சோம், அவனியெலாம் எம் [உடைமை;
சூதுக்கும், வஞ்சனைக்கும், சூழ்ச்சிக்கும் மாந்தர் [செயும்
வாதுக்கும் மாமருந்து யாம்புகலும் வண்கவிதை”

என்று நெஞ்சாரச் சொல்வாரா ஸ்ரீமான் ச. து. யோகியார் என்ற கவிஞர்?

## * APPRECIATION

Prof. A. Muthusivan, a deep scholar in Tamil has intelligently applied the saner higher fundamentals of English Criticism to Tamil Literature, throwing a flood of light on new truths he has discovered, in Tamil literary criticism.

Prof. Bradley's Conception of Shakespearean tragedy has been quintessentially interpreted in Tamil by the author with adequate illustrations from Tamil classics; the critical Tamil prose he employs, aptly and creatively accommodates itself to the higher subtleties of English criticism.

He has discussed the philosophy of Laughter in all its versatile alertness: Laughter kindles life or chokes Destiny's freaks in Man's frivolous oblivion.

The author's higher interpretation of Poetry is a critical masterpiece; it is lucid, apt, richly illustrated, subtly drawn out from a sublimer reality of Truth and Beauty and Suffering in consonance with Art's assurance; the treatment of the topic is superb.

In 'Asokavanam', he has magnificently discussed the epic poetic genius of Kamban in a masterly manner; the diction is racy, rippling round the superb theme of Sorrow's Shadow; his Tamil prose hums round the poetic atmosphere of Asokavanam. Kamban kindles a storm of Emotion which is triumphantly and artistically released by our critic, the author.

As a critic who is keenly bent on developing critical literature in Tamil, his effort is a marvellous triumph, deserving admiration from the University and the discerning Tamil Public.

Besides 'Asokavanam', he has written three more books which are really a welcome contribution to creative criticism in Tamil literature.

---

8-12-47 V. R. M. Chettiar KARAIKUDI

* ஆசிரியர் எழுதிய அசோகவனம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் எழுதிய இதர நூல்கள்

1. அசோகவனம்
2. அசலும் நகலும்
3. மின்னல் கீற்று
4. மேடைக் கலை
5. கவிதையும் வாழ்க்கையும்
6. அமரகவி பாரதி
7. கலிங்கத்துப் பரணி
   (விளக்கமும் விமர்சனமும்)
8. நந்திக் கலம்பகம்
   (விளக்கமும் விமர்சனமும்)
9. காவிய ரசனை

## எங்கள் புதிய வெளியீடுகள்

"கடல் கன்னி" - ஆஸ்கார் ஒயில்டு

இரண்டு சிறந்த காதல் கதைகள் ரூ. 1 8 0

★

"கனி கொய்தல்" - ரவீந்திரநாத தாகூர்

தமிழில் : V. R. M. செட்டியார் ரூ. 2 8 0

★

"கீதாஞ்சலி" - தாகூர்

(சிறு சைஸ்) ரூ. 0 4 0

★

"அசோகவனம்" - கட்டுரைகள்

ஆ. முத்துசிவன் B. A. (Hons) ரூ. 2 8 0

★

STAR PUBLICATIONS

71, BIG STREET

TRIPLICANE MADRAS - 5


Wrapper Printed at Krishna Press, Karaikudi. Party Supply